Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம்
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 18 (09.04.2004) வெள்ளிக்கிழமை இதழ் :191

விரைவாகவும், துல்லியமாகவும் உங்கள் இல்லங்களிலிருந்து உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்

INTERNET

மூலம் தொடர்புகொள்ள உள்நாடு, வெளிநாடுகளுக்கான சகலவிதமான துரித தபால்/ பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

இல.46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி
T.P -021-222-7310
(சி-1844)

## நாட்டைப் பாதுகாக்கும் அரசுக்கு ஹெல உறுமய ஆதரவளிக்கும்!

### கட்சியின் செயலாளர் தகவல்

(கொழும்பு)

நாட்டையும் மக்களையும் நாடாளுமன்ற மூடாக நல்லமுறையில் முன்னெடுத்துச் செல்லும் புதிய அரசாங்கத்திற்கு ஜாதிக ஹெல உறுமய தனது ஆதரவினை வழங்கும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் செயலாளர் வண.உடுவே தம்மலோக தேரோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் -

நாட்டை சட்ட ரீதியான முறையில் பாதுகாப்பாக ஆளும் அரசாங்கத்திறகு எமது கட்சி ஆதரவை வழங்கும்.

அத்துடன் எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் சலுகைகள் எதனையும் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் பெறும் சம்பளம் அனைத்தும் ஒரு பொதுநிதியத்தில் வைப்பிலிடப்படும். இவ்வாறு வைப்பிலிடப்பட்ட நிதி பொதுமக்களின் பயன்பாடுகளுக்காக செலவிடப்படும். அத்துடன் ஹெலஉறுமய கட்சியின் நடவடிக்கைகள் தேசிய ரீதியில் விரிவுபடுத்தப்படவுள்ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமயவின் தேசியப் பட்டியலில் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி!

### உயர் சபை ஆலோசனை நடத்துகிறது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரிக்கு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவது குறித்து அந்தக் கட்சியின் அதியுயர் சபை நேற்று முன்தினம் கலந்தாலோசனை நடத்தியதாகத் தெரியவருகிறது.

இந்தக் கலந்துரையாடலின்போது இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என ஹெல உறுமயவின் அதியுயர் சங்க பீடத்தின் ஊடகப் பேச்சாளர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

இம்முறை தேர்தலில் வடக்கில் ஆனந்தசங்கரி ஜனநாயக ரீதியாக தோற்கடிக்கப்படவில்லை. இதனால் தமிழ் சமூகத்தின் உண்மையான மக்கள் குரல் ஒலிக்கவில்லை. இந்த நிலை காரணமாக ஆனந்தசங்கரியின் கொள்கைகளும், அபிலாஷைகளும் எதுவாக இருப்பினும், அவருக்கு ஜனநாயக ரீதியாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசாங்கத்திற்கு அமெரிக்கா ஆதரவு!

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கத்திற்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அவரின் வாசஸ்தலத்தில் சந்தித்த அமெரிக்க உயர் ஸ்தானிகர் ஜெப்றி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க காங்கிரஸ் குழு அடுத்தவாரம் வருகிறது!

(கொழும்பு)

அமெரிக்க காங்கிரஸின் உறுப்பினர்கள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்றுத் தெரிவித்தது.

இவ்வாறு வரும் குழுவில் மூவர் இடம்பெறுகின்றனர். அதில் கலிபோர்னியாவின் ஆளும்சபை உறுப்பினர் டேவிட் ட்ரீயர், வர்த்தகக் குழு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில் – ஹக்கீம் நேற்று சந்திப்பு!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக்

# இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு; புதிய அரசாங்கம் நடவடிக்கை!

## மே மாதம் 5 முதல் ஆரம்பமாகும்

(கொழும்பு)

**புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பை மேற்கொள்வதற்கான அறிவிப்பை இராணுவத் தலைமையகம் நேற்று வெளியிட்டது.**

**இராணுவத்தின் ஆளணிப் பலத்தை அதிகரிக்கும்நோக்குடன் எதிர்வரும் மே 5 ஆம் திகதி முதல் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.**

18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்துகொள்ளலாம் என்றும் - இவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அமைதிப்படையில் பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றுவதற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் புதிதாக சேரும் படையினருக்கு வழங்கப்படும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 32 அமைச்சர்கள் இன்று பதவியேற்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 32 அமைச் ... திபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய மக் ... மற்றும் முதலீட்டு அமைச்சராகவும், மங்கள சமரவீர மின்சக்தி அமைச்சராகவும், சுசில் பிரேம ஜெயந்த

## இளைஞரின் சடலம் வாழைச்சேனையில் மீட்பு!

மட்டக்களப்பு - வாழைச்சேனை, கறுவாக்கேணி பிரதேசத்தில் அடையாளம் காணப்படாத இளைஞர் ஒருவரின் சடலத்தை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

உயிரிழந்தவரின் தலையில் துப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 32 ஈழத்தமிழ் அகதிகள் மன்னார் திரும்பினர்!

இந்தியா தர்மபுரி மாவட்டம் வாணியாறு அகதி முகாமில் தஞ்சம் கோரியிருந்த ஈழத்தமிழ் அகதிகள் 32 பேர் நேற்று தாயகம் திரும்பினர்

ராமேஸ்வரம் ஊடாக 18 ஆண்களும், 7 பெண்களும் மற்றும் 7 குழந்தைகளும் மன்னார் - பேசாலையை வந்தடைந்தனர்.

இவர்கள் தமது இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர். (201)

## மத்திய மாகாணசபை 27 ஆம் திகதி கலைப்பு!

(கொழும்பு)

மத்திய மாகாணசபை எதிர்வரும் 27 ஆம் திகதி கலைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் அதி

## ரணில் – ஹக்கீம் நேற்று சந்திப்பு!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது தேசியப பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 32 அமைச்சர்கள் இன்று பதவியேற்பு!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் 32 அமைச்சர்கள் இன்று பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் 4 பேர் ஜே.வி.பியைச் சேர்ந்தவர்களாவர்.

அமைச்சர்களை முடிவுசெய்வதற்கான இறுதிக் கூட்டம் நேற்று ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் ராஜபக்ஷ மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதன்படி லக்ஷ்மன் கதிர்காமர் வெளியுறவு அமைச்சராகவும் அநுரா பண்டாரநாயக்க உல்லாசப் பிரயாண மற்றும் முதலீட்டு அமைச்சராகவும், மங்கள சமரவீர மின்சக்தி அமைச்சராகவும், சுசில் பிரேம ஜெயந்த கல்வி, உயர் கல்வி அமைச்சராகவும், சரத் அமுனுகம மனிதவள அமைச்சராகவும், அநுரபிரியதர்சன ஊடகத்துறை அமைச்சராகவும், ஜோன் செனவிரத்ன சுகாதார அமைச்சராகவும்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

மத்திய மாகாணசபை எதிர்வரும் 27 ஆம் திகதி கலைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எதிர்வரும் 26 ஆம் திகதியுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரத்திலுள்ள மத்திய மாகாண சபையின் ஆயுட்காலம் முடிவடைகின்றது.

இந்தநிலையில் மத்திய மாகாண சபை எதிர்வரும் 27 ஆம் திகதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கு ஆதரவளித்ததான

# 'பொடா' வழக்கிலிருந்து வைகோவுக்கு விடுதலை!



(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்ததாக வைகோ உட்பட ஒன்பது பேருக்கு எதிராக தமிழக அரசால் தொடுக்கப்பட்ட வழக்கு, பொடா மறு ஆய்வுக்குழுவால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்தத் தீர்ப்பு பொடா மறு ஆய்வுக் குழுத் தலைவர் நீதிபதி சக்காரியாரால் அறிவிக்கப்பட்டது.

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உட்பட ஒன்பது பேர் மீது தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் நடப்பதற்கு முகாந்திரமில்லை.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய கடற்படைக் கப்பல் கொழும்புக்கு வருகின்றது!

(கொழும்பு)

இந்தியக் கடற்படைக் கப்பலான 'தரங்கனி' அடுத்த வாரம் கொழும்பு துறைமுகத்துக்கு விஜயம் செய்யவிருப்பதாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியக் கடற்படைக் கப்பலான 'தரங்கனி' மேற்கொண்டிருக்கும் கடற் பயணத்தின் இறுதிக் கட்டமாகவே எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை கொழும்பில் தரிக்கவுள்ளது.

இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவெனக் கூறப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
EXPOAIR
வான் வெளியில் உங்கள் நண்பன்...
your friend in the skies...

# தமிழரின் ஒற்றுமையை வெளிப்படுத்த மன்னார் மக்கள் வாக்களித்துள்ளனர்!

## மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் பல வருடமாக வாக்களிக்கும் உரிமை மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த போதும் இம்முறை மக்கள் சுதந்திரமான முறையில் வாக்களித்தனர் என மன்னார் மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் தெரிவித்தார்.

13 ஆவது நாடாளுமன்றத் தெரிவிற்கு மன்னார் மக்களின் வாக்களிப்புத் தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - மன்னார் மாவட்ட மக்கள் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலை இம்முறை சந்தித்துள்ளனர். இம்முறை தேர்தலில் தமிழ்த் தேசியம், தமிழ் உரிமை என்பவற்றைப் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் வாக்களித்துள்ளனர்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கிய திருப்பமாக அமையப்போகும் தேர்தல் இதுவென உணர்ந்த மக்கள் உணர்வுபூர்வமாக மனதார வாக்களித்ததை நான் கண்களால் கண்டேன்.

கடந்த 20 வருடகாலமாக இராணுவ அடக்குமுறையால் மக்கள் பல துன்பங்களை அனுபவித்துள்ளனர். ஆனால், தற்போது தமிழ் மக்கள் ஒரு பலமான நிலையில் உள்ளனர். சர்வதேசத்திற்கு எமது ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும் என்ற உணர்வுடன் மக்கள் வாக்களித்தனர்.

நாம் கடந்த 20 வருடத்திற்கு மேலாக நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கொள்ளாதவர்கள். ஏனென்றால் நடைபெற்றுமுடிந்த 12 நாடாளுமன்றத் தேர்தல்களிலும் மக்களுக்கு வாக்களித்தபடி வாக்குறுதிகளை நிறைவேற்றாது மக்களை அரசியல்வாதிகள் ஏமாற்றிவந்துள்ளனர். ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபின்னர் சர்வதேச சமூகம் எம்மை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.

நாங்கள் ஒரு பலமான நிலையில் இருக்கின்றோம் என்பதை சர்வதேசத்திற்கு உணர்த்தவேண்டிய தேவையுள்ளது. அதற்கு இம்முறை தேர்தல் ஒரு களமாக அமைந்துள்ளது. சர்வதேசத்துக்கு எமது நிலைமை தொடர்பாக விளக்க வேண்டிய தேவையொன்று ஏற்பட்டிருக்கின்றது.

மக்களுடைய உணர்ச்சிகளையும், தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டையும் சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தவேண்டிய தேவையொன்று இருந்தது. இதற்கு இம்முறை தேர்தலை மக்கள் சிறப்பாக பயன்படுத்தினர் என அரசியற் துறைப் பொறுப்பாளர் மேலும் கருத்துத் தெரிவித்தார். (03)

# தொழிற்பயிற்சி நிறைவுநாளும் கைப்பணிப் பொருள் கண்காட்சியும்

அகதிகளுக்கான ஐ.நா உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் யாழ். சமூக செயற்திட்ட மையத்தின் ஊடாக வழங்கப்பட்டுவந்த தொழிற்பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வுகளும், அதனோடிணைந்த கைப்பணிப பொருள் கண்காட்சியும் இன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி பி.எல்.திலகநாயகம் போல் கலந்துகொள்வார். இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வினைத் தொடர்ந்து பயிற்சியாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட பல கைப்பணிப் பொருட்கள் பார்வைக்கு வைக்கப்படுவதுடன் விற்பனையும் செய்யப்படவுள்ளன.

இந்த நிகழ்வு தொடர்ந்து 12 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

### யாழ்.பல்கலைக்கழகத்தில்

# மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அதன் கடல்வள அபிவிருத்தி நிலையமூடாக இரண்டு ஆண்டுகால மீன்பிடியியல் கற்கைநெறியொன்றை இவ்வாண்டு முதல் நடத்தத் தீர்மானித்துள்ளதாக யாழ்.பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலைய இயக்குநர் கே.சித்திரவடிவேலு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த சில ஆண்டுகளாக யாழ். பல்கலைக்கழகம் நடத்திவந்த ஒரு வருடகால மீன்பிடியியல் டிப்ளோமாவை பூர்த்தி செய்தவர்களுள் குறிப்பிட்ட தொகையினர் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மேலும் ஒரு வருடம் பயிற்சியளிப்பதன் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்படும் இரு ஆண்டு மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமாவைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கான வாய்ப்பு இவ்வாண்டு மட்டுமே நடைபெறவுள்ளது. கற்கைநெறி அடுத்த மாதம் 10 ஆம் திகதி தொடங்கி ஒரு வருட காலம் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட ஒரு வருட மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியில் சித்திபெற்ற எவரும் இக் கற்கை நெறிக்கு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


## நெஞ்சம் நிறைந்த நன்றிகள்



நடைபெற்றுமுடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியம், தமிழர் தாயகம், தன்னாட்சி உரிமை என்பவற்றை வலியுறுத்தி நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழு ஆதரவையும் வழங்கி, கூட்டமைப்பின் கொள்கைகளை அங்கீகரித்து, ஆணை வழங்கி வாக்களித்த அனைத்து தமிழ்பேசும் வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந்தத் தேர்தலில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய எனது விருப்பு வாக்கு இல 5 இற்கு பெருமளவிலான விருப்பு வாக்குகளை வழங்கி எனக்கு பெரு வெற்றியைத் தேடித்தந்த யாழ். மாவட்டத்தின் அனைத்துத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், கிளிநொச்சி மாவட்ட வாக்காளப் பெருமக்களுக்கும் தபால்மூல வாக்களிப்பில் எனக்கு கூடுதலான வாக்குகளை வழங்கி பேராதரவு தந்து வாக்களித்த யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர்களுக்கும், யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள், எனது வெற்றிக்காக அயராது உழைத்த நண்பர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

அன்புடன்,
தமிழ்த் தேசியத்தின் வழியில் என்றும்
உங்கள் சேவையில்
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(சி-2436)


# நிவாரண முத்திரைகள் இன்மையால் 'போமிற்' மூலமே நிவாரண விநியோகம்

நிவாரண முத்திரைகள் போதியளவில் வந்து சேராமையால் ஜனவரிமாத நிவாரணத்தை 'போமிற்' மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டிருப்பதாக, யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது - 2004 ஆம் ஆண்டுக்கான நிவாரண விநியோகத்திற்கான முத்திரைகள் போதியளவில் வந்து சேராமையால் பெரும்பாலானோருக்கு 'போமிற்' மூலம் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்காக எவரும் குழப்பமடையத் தேவையில்லை. சிறு தொகையான நிவாரண முத்திரைகளே கிடைக்கப் பெற்றிருப்பதால் அவை மட்டும் சில கிராம சேவையாளர் பிரிவுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

ஏனையோருக்கு நிவாரண முத்திரைகள் வந்து சேர்ந்ததும் வழங்கப்படவுள்ளன. கடந்த ஆண்டின் இறுதியிலிருந்து நிவாரணத்துக்கு மாவிற்குப் பதிலாக சிவத்தைப் பச்சை அரிசி வழங்கும் முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டும் அவ்வாறே சிவத்தைப் பச்சை அரிசியே வழங்கப்படும் எனவும், வன்னிப் பகுதியிலிருந்தே இந்த வருடமும் நிவாரணத்துக்கான அரிசி கொள்வனவு செய்யப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கடந்த மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற மீளாய்வின் பிரகாரம் நிவாரண விடயத்தில் நிலவிவந்த சில குறைபாடுகள் நீக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)


அழகும், கலைத்துவமும் மிக்க
நவீன முறையிலான நம்பகமான இடம்

சுரபி பதிப்பகம்

பத்திரிகைகள், விழா மலர்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள்,
பிரசுரங்கள், அழைப்பிதழ்கள் அனைத்தையும் உங்கள்
மனநிறைவுக்கேற்ப அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 5107


# வீதி விபத்தில் சிறுவன் படுகாயம்

அயல் வீட்டில் திரைப்படம் பார்க்க ஓடிவந்த சிறுவன் வீதியில் வேகமாக வந்த காருடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளான்.

இந்தச் சம்பவம் - நுணாவில் மேற்கு நுணாவில் பகுதியில் இடம் பெற்றது. சம்பவத்தின் போது 3 வயதையுடைய நவரத்தினம் சசிதரனே காயமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - அயலிலுள்ள உறவினர்களின் வீட்டில் திரைப்படம் பார்ப்பதற்கு வீதியால் மேற்படி சிறுவன் சென்றகொண்டிருந்தவேளை வீதியில் வேகமாக வந்த காருடன் மோதி தலையிலும், காலிலும் படுகாயமடைந்தார். காயமடைந்த சிறுவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைகது அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (34)

## அதிபர்களின் கூட்டம் இரத்து

யாழ்.கல்வி வலயத்தை சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை மு.ப. 9.30 மணிக்கு யாழ். வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவிருந்தது. இந்தக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என, யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் 2004 ஆம் ஆண்டுக்கான யாழ்.மாவட்ட செயற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ப)


நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், மீனா, றிச்சர்ட் பற்றன் நடித்த
ஷாஜகான்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
Maid in Man Hattan
(சி-2386)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல்
விஜய் மற்றும் பலர் நடித்த
A.R. ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
(சி-2397)

ராஜா யாழ்ப்பாணம்.
லிட்டில் சூப்பர் ஸ்டார் சிம்பு நடித்த

காட்சி நேரம்:-
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே)
(சி-2387)

# புதிய அரசுடனான இந்திய உறவுகளை அமெரிக்க சார்பு நாடுகள் கவனிப்பு

இலங்கையில் புதிதாக ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளைச் சர்வதேச சமூகம் குறிப்பாக அமெரிக்க சார்பு நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருகின்றது.

புதிய அரசுக்கும், இந்தியாவுக்குமிடையே ஏற்பட்டுவரும் மாறுபட்ட உறவுகளின் தன்மையானது, ஏற்கெனவே முன்னர் ஐ.தே.முன்னணி அரசு காலத்தில் ரணிலுக்கும், அமெரிக்காவுக்குமிடையிலான இறுக்கமான உறவுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக அமைந்து வருவதை இந்த நாடுகள் அவதானிக்கத் தொடங்கியுள்ளன.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவும், அமெரிக்காவும் தமது ஆதிக்க வலுவைப் பலப்படுத்த பல்வேறு உத்திகளையும், நடவடிக்கைகளையும் கையாண்டு வருவது வெளிப்படையான விடயமேயாகும்.

புதிய அரசு இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதில் தீவிரமாக இருப்பதும், சமாதான நகர்வுகளுள் இந்தியாவை இழுக்க முயல்வதும் புதிய அரசியல் சிக்கல்களுக்கு வழிவகுக்கும் என்றும் கூறப்படுகிறது.

புதிய பிரதமரை உடனடியாகச் சென்று இந்தியத் தூதர் சந்தித்ததும், ஸ்திரமான அரசை அமைக்குமாறு டெல்கி ஜனாதிபதிக்கு அறிவுறுத்தியுள்ளதும், இந்தியா இலங்கைமீது புதிய அணுகுமுறையைக் கையாளத் தொடங்குவதை உணர்த்துவதாக உள்ளது என அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது.

## கவுணாவத்தை வைரவர் ஆலயம் செல்ல படையினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை கவுணாவத்தை அருள்மிகு நரசிங்க வைரவர் தேவஸ்தானத்திற்குச் செல்வதற்கு படையினர் அனுமதியளித்துள்ளனர்.

பங்குனித் திங்களின் இறுதித் திங்களான 12 ஆம் திகதி அடியார்களுக்கு அன்னதாகம் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

புதுவருடப் பிறப்பன்று பக்தர்கள் வழிபடவும் படையினர் அனுமதியளித்துள்ளனர் என கவுணாவத்தை தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

## மக்களின் எதிர்பார்ப்புக்களை அரசு விரைவில் நிறைவேற்றும்

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மக்களின் எதிர்பார்ப்புக்களை வெகுவிரைவில் நிறைவேற்றும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

திஸ்ஸமகாராம ரஜமகா விகாரையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்து சமய வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்ட பிரதமர் ராஜபக்ஷ பின்னர் திஸ்ஸ மகாராம விகாரைக்கு விஜயம் செய்தார்.

அங்கு உரை நிகழ்த்திய அவர் - மக்கள் புதிய அரசாங்கத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கை ஒருபோதும் புறக்கணிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்தார்.

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி; 4 மாதங்களுக்குள் ஒழிக்கப்படும்!

### மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவி - அடுத்த நான்கு மாத காலத்துக்குள் இல்லாதொழிக்கப்படும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறுகையில் -

நாம் விரைவில் அரசியலமைப்பில் மாற்றம் செய்து, ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்களை நாடாளுமன்றத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப்பதவியை நீக்குவதற்கான மக்களாணை கிடைத்துள்ளது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.







போரினால் கணவனை இழந்த குடும்பத் தலைவிகளுக்கான சுயதொழில் கடன்வழங்கும் நிகழ்வு நேற்று குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெற்றபோது 'அகவொளி' நிலையப் பணிப்பாளர் வண. எஸ். ஜே. இராசநாயகம் அடிகள் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் - தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான அறங்காவலர் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விதவைகளுக்கு கடன் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## அரசின் சமாதானச் செயலகத்தில் விரைவில் மாற்றங்கள் வரும்!

### கொழும்பு பத்திரிகை தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்தின் சமாதான செயலகத்தில் மாற்றம் செய்யப்படவிருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டிப்பதாவது -

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் நோர்வே அனுசரணையாளருடன் இணைந்து பணியாற்றுவதற்காக அமைக்கப்பட்ட இந்த சமாதான செயலகம் பேணாட் குணதிலக தலைமையில் இயங்கி வருகிறது.

சிறந்த இராஜதந்திரியான பேணாட் குணதிலக தலைமையிலான சமாதானச் செயலகத்தில் முன்னாள் கடற்படை அதிகாரி றியல் அட்மிரல் டி.கே.தஸநாயக்க, நந்த கொடகே ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

ஐ.தே.மு. சார்பானவரான பேணாட் குணதிலகவை சமாதானச் செயலகத்திலிருந்து மாற்றப் புதிய அரசு நடவடிக்கை எடுக்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனினும், இது குறித்து சமாதானச் செயலக அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில் - அதுவரை அப்படிப்பட்ட மாற்றம் எதுவும் நடைபெறவில்லையெனத் தெரிவித்தனர்.

## வடமேல் மாகாணசபை தேர்தல் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

வடமேல் மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்திருப்பதாக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தத் தேர்தல் - குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 11 இலட்சம் வாக்காளர்களும், புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த 4 இலட்சத்து 50 ஆயிரத்து 57 வாக்காளர்களும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தத் தேர்தலில் 11 அரசியல் கட்சிகளும், 7 சுயேட்சைக்குழுக்களும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளனர். பொதுத்தேர்தலை முன்னிட்டு இடைநிறுத்தியிருந்த தேர்தல் பிரசாரங்களை அனைத்துக் கட்சிகளும் நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## உலகெங்கும் வீதி விபத்துக்களால் வருடாந்தம் 12 இலட்சம் பேர் மரணம்

(கொழும்பு)

வீதி விபத்துக்களில் ஒவ்வொரு ஆண்டும் 12 இலட்சம் பேர் உலகில் உயிரிழந்து வருகின்றனர் என உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு வீதிப பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்துதல் வேண்டும் என்னும் தொனிப்பொருளில் உலக சுகாதார அமைப்பு நேற்றுமுன்தினம் அனுஷ்டித்தது.

அவ்வேளையே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

உலகில் எச்.ஐ.வி தொற்றினால் உயிரிழப்போரிலும் பார்க்க அதிகளவானோர் வீதிவிபத்துக்களால் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறு வீதிவிபத்துக்களால் உயிரிழப்போரின் எண்ணிக்கை ஒரு சில ஆண்டுகளில் மேலும் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்பிருப்பதாகவும் உலகசுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இவ்வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சுகாதார மையம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இதற்கென அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கியநாடுகள் சபையின் செயலர் கொபி அனான் தெரிவித்தார்.

## புதிய அமைச்சரவையில் 35 பேர் இன்று சுபநேரத்தில் பதவியேற்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய அமைச்சரவை - இன்று காலை சுபநேரத்தில் பதவியேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அமைச்சரவை 35 உறுப்பினர்களை கொண்டிருக்கும் என்றும், இதில் நான்கு அமைச்சர் பதவிகள் ஜே.வி.பிக்கு ஒதுக்கப்படும் என்றும், தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் முக்கிய அமைச்சர் பதவியொன்று வழங்கப்படும் எனத் தெரியவருகிறது.

புதிய அமைச்சரவை நேற்றுமுன்தினம் பதவியேற்கலாம் என்று கடந்த செவ்வாய்க்கிழமை சுவர்ணவாஹினி தொலைக்காட்சியில் இடம்பெற்ற உரையாடல் ஒன்றின் போது முனனணியின் பொதுச்செயலாளரான சுசில் பிரேம்ஜயந்த கூறியிருந்தார்.

ஆனாலும், அமைச்சுப் பொறுப்புகளை ஒதுக்குவதில் இழுபறிநிலை தோன்றியதால், திட்டமிட்டபடி மந்திரி சபையின் பட்டியல் நேற்றுமுன்தினம் மாலைவரை பூர்த்தியாக்கப்படவில்லை. இதனைப் பூர்த்தி செய்யும் பணியில் ஜனாதிபதியும் பிரதமரும் மற்றும் கட்சித்தலைவர்களும் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நீண்டநேரம் ஈடுபட்டிருந்தனர்.

புதிய அமைச்சரவை எப்போது பதவியேற்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜயந்திடம் வினவியபோது, இன்று பதவியேற்கவிருப்பதாகக் பதிலளித்தார்.

ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்சவும் இதனை ஊர்ஜிதம் செய்தார். இன்று காலை 8.51 மணிக்கும் 9 மணிக்குமிடையேயுள்ள சுபவேளையில் புதிய மந்திரிசபை பதவியேற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே பாதுகாப்பு அமைச்சு, நிதியமைச்சு ஆகியவற்றின் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தாமே வைத்திருப்பாரென்றும், அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

முக்கிய அமைச்சான நிதி அமைச்சையும் ஜனாதிபதியே வைத்துக்கொள்ளலாமென அரசியல் வட்டாரங்களில் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. எனினும், பிரதி அமைச்சர்கள், அமைச்சின் செயலாளர்கள் ஆகியோரைத் தெரிவு செய்யும் பணிகளும் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதேவேளை, புதிய அரசு தனது ஸ்திரத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில், தொடர்ந்து சிறிய கட்சிகளின் உதவியை நாடிவருவதாகத் தெரியவருகிறது.

225 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிடம் 105 ஆசனங்களே உள்ளன. அரசாங்கம் ஸ்திரநிலையை அடைய வேண்டுமெனில் மேலும் 8 ஆசனங்கள் தேவை.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸிடம் போனஸ் ஆசனங்கள் இரண்டையும் சேர்த்து 8 ஆசனங்கள் உள்ளன. எனினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இதுவரை தனது உறுதியான நிலைப்பாடு என்ன என்று கூறவில்லை. அதன் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அனைத்து வாய்ப்புக்களும் திறந்த நிலையிலுள்ளன என்று மாத்திரம் கூறியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை எடுத்துக் கொண்டால் - அதன் வசம் ஐந்து ஆசனங்கள் உள்ளன. எனினும், அங்கிருந்தும் சரியான 'சமிஞ்ஞை'கள் புதிய அரசுக்கு வந்ததாகத் தெரியவில்லை. பௌத்த பிக்குகள் அமைப்புக்கு ஒன்பது ஆசனங்கள் உள்ளன. அதன் தலைவர் அரசாங்கத்துடன் இணைந்து சில விடயங்களுக்காக வாக்களிப்போம் என்றும், கூட்டுச் சேர்வது பற்றி நாம் சிந்திக்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

இவ்வாறானதோர் இக்கட்டான சூழ்நிலையில், புதிய அரசு தனது ஸ்திரத்தன்மையைப் நாடாளுமன்றத்தில் நிரூபிப்பதற்கும், அதற்கு முன்னர் அமைச்சரவையை தெரிவுசெய்வதற்கும் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## லாகூரில் நடந்த 2 ஆவது டெஸ்ட்

# பாகிஸ்தான் 9 விக்கெட்டுகளால் இந்திய அணியைத் தோற்கடித்தது



(லாகூர்)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் லாகூரில் நேற்றுடன் நடந்துமுடிந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் 9 விக்கெட்டுக்களால் இந்தியாவைத் தோற்கடித்தது.

முன்னதாக மூன்றாம் நாளான நேற்று முன்தினம் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 149 ஓட்டங்களைப்பெற்று, நெருக்கடி நிலையில் இருந்த இந்தியா, நேற்று தனது ஆட்டத்தைத் தொடங்கி சிறிது நேரத்திலேயே, ஷேவாக், பதான் என இரண்டு விக்கெட்டுக்களையும் சொகைப் அக்தரின் ஒரு ஓவரிலேயே அடுத்தடுத்து இழந்தது.

அதன்பின் பார்த்தீவ் பட்டேலுடன் எட்டாவது விக்கெட்டுக்காக இணைந்த அகர்கர் ஜோடி மிகச்சிறப்பாக விளையாடி தமக்கிடையே 75 ஓட்டங்களைப் பெற்றதுடன் இந்தியாவை இனிங்ஸ் தோல்வியிலிருந்தும் காத்தனர். இறுதியில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக - ஷேவாக் 90, பட்டேல் ஆட்டமிழக்காமல் 62, அகர்கர் 36 ஓட்டங்களைப் பெற்றதுடன் நான்கு வீரர்கள் பதினைந்திற்கும் குறைந்த ஓட்டங்களுடனும், ராவிட், பதான், கும்ளே, பாலாஜி நால்வரும் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் அக்தர் மற்றும் கனேரியா இருவரும் தலா மூன்று விக்கெட்டுக்களையும் மொகமட் சமி இரண்டு விக்கெட்டுக்களையும், உமர்குல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

வெற்றிபெறுவதற்கு 40 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் இம்ரன் பர்கத் 9 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பாலாஜியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் தபீக் உமர் 14, யாசிர் ஹமீட் 16 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது.

இந்தியா முதல் இனிங்ஸில் 287, இரண்டாவது இனிங்ஸில் 241 ஓட்டங்களையும் பாகிஸ்தான் முதல் இனிங்ஸில் 489, இரண்டாவது இனிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 40 ஓட்டங்களையும் பெற்றன.

நடந்துமுடிந்த இரண்டு டெஸ்ட்டிலும் இரு அணிகளும் 1:1 என்ற நிலையில் வென்று சமநிலையில் உள்ளன. மூன்றாவது போட்டி எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ராவல்பிண்டியில் நடைபெறும்.

## சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டி முடிவுகளின் விபரம் வருமாறு :-

*15 வயதிற்குட்பட்ட பிரிவில்* - யாழ். வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை முதலாமிடத்தையும், யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

*19 வயதுக்குட்பட்ட பிரிவில்* - யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை முதலாமிடத்தையும், யாழ். தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், யாழ். வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

## மாகாண மட்டத்திலான மேசைப்பந்தாட்டப் போட்டி

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால், மாகாண மட்டப் போட்டிக்கான மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் 2004 ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டித் தொடரில், மேசைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் ஆண், பெண் அணியினரை நேர அட்டவணைக்கு ஏற்ப சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதுடன், அன்றைய தினமே வீரர்களின் தரநிலைத் தரப்படுத்தல் இடம் பெறவுள்ளதால் - விண்ணப்பித்த, விளையாடவுள்ள ஆண், பெண்கள் அணியினரை கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர். (205)

## விளையாட்டு

# ராவல்பிண்டி டெஸ்ட்டில் அக்தர் நீக்கப்படலாம்

(லாகூர்)



இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி தொடங்குவதற்கு முன்பு சொகைப் அக்தர் மிகப்பெரிய சக்தியாக விளங்குவார் என்ற கூறப்பட்டது. அதற்கு ஏற்றவாறு வாய்ச் சவாடல் விட்டார்.

ஆனால், அவரது பந்து வீச்சோ எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. ஒருநாள் தொடரில் சுமாராக பந்து வீசிய அவர் டெஸ்ட் தொடரில் மிகவும் மோசமான முறையில் பந்து வீசினார். முல்தான் டெஸ்டில் ஒரு விக்கெட்டைக்கூடக் கைப்பற்றவில்லை. லாகூரில் தற்போது நடைபெற்ற 2 ஆவது டெஸ்டின் முதல் இனிங்ஸில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

இந்த நிலையில் சரியாகப் பந்து வீசாததால் நெருக்கடியில் உள்ளேன் என்று சொகைப் அக்தர் கூறியுள்ளார். அவர் கூறும்போது - எனது பந்து வீச்சில் நேர்த்தி இல்லை. முழுத் திறமையுடன் பந்து வீச இயலவில்லை என்றார்.

அக்தர் குறித்து பாகிஸ்தான் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம் கூறும்போது - டெஸ்ட் தொடரில் விளயைாடுவதற்கான உடல் தகுதியுடன் அக்தர் இல்லை என்றார்.

2 ஆவது டெஸ்டில் சிறப்பாகப் பந்து வீசாவிட்டால் நீக்கப்படுவீர்கள் என்று கப்டன் இன்ஸமாம், பந்து வீச்சாளர்களை எச்சரித்து இருந்தார். இதனால் ராவல்பிண்டியில் நடைபெறும் 3 ஆவது டெஸ்டில் - ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ் என்று அழைக்கப்படும் அக்தர் நீக்கப்படலாம் என்று தெரிகிறது.

# ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 2 ஆவது இடத்தில்!

## சாம்சங் நிறுவனத்தின் கணிப்பீடு

டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அடிப்படையில் அணிகள் மற்றும் வீரர்களின் வரிசைப் பட்டியலை சாம்சங் நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அணிகள் வரிசைப் பட்டியலில் இந்தியா 2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

ஒருநாள் போட்டியின் அணிகள் வரிசைப் பட்டியலில் 76 புள்ளிகளுடன் அவுஸ்ரேலியா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இந்தியா-பாகிஸ்தானுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியதன்மூலம் 67 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

தென்னாபிரிக்கா (63 புள்ளிகள்) 3 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் (59 புள்ளிகள்) 4 ஆவது இடத்திலும், நியூஸிலாந்து (56 புள்ளிகள்) 5 ஆவது இடத்திலும், இலங்கை 6 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் 8 ஆவது இடத்திலும், சிம்பாப்வே 9 ஆவது இடத்திலும், கென்யா மற்றும் பங்களாதேஷ் 10 ஆவது இடத்திலும் உள்ளன.

துடுப்பாட்டத்தில் இந்திய வீரர் டெண்டுல்கர் 89 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். 2 ஆவது இடத்தில் அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட் 84 புள்ளிகளுடன் உள்ளார். 75 புள்ளிகள் பெற்றுள்ள லக்ஸ்மன் 3 ஆவது இடத்திலுள்ளார். இந்திய வீரர்கள் ராவிட் (67 புள்ளிகள்) 7ஆவது இடத்திலும், ஷேவாக் (65 புள்ளிகள்) 9 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் - இந்திய வீரர் இர்பான் பதான் 157 புள்ளிகள் பெற்று முதலிடத்திலும், பாகிஸ்தான் வீரர் முகமதுசமி 144 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திலும், மற்ற இந்திய வீரர்களான சகீர்கான் (125 புள்ளிகள்) 6 ஆவது இடத்திலும், பாலாஜி (112 புள்ளிகள்) 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

டெஸ்ட் போட்டியில் 80 புள்ளிகளுடன் அவுஸ்ரேலியா முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்கா 2 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 3 ஆவது இடத்திலும் உள்ளன. 55 புள்ளிகளைப் பெற்ற இந்தியாவும், பாகிஸ்தானும் 4 ஆவது இடத்தைப் பிடித்துள்ளன. 5 ஆவது இடத்தில் நியூஸிலாந்து உள்ளது.

டெஸ்ட் துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித் 169 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். கிப்ஸ், கலிஸ் (தென்னாபிரிக்கா), ஹைடன், ரிக்கி பொண்டிங் ஆகியோர் முறையே 2 தொடக்கம் 5 இடங்களைப் பிடித்துள்ளனர். இந்திய வீரர்களான ஷேவாக் 113 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்திலும், ராகுல் ராவிட் 112 புள்ளிகளுடன் 7 ஆவது இடத்திலும், டெண்டுல்கர் 97 புள்ளியுடன் 8 ஆவது இடத்திலும், லக்ஸ்மன் 90 புள்ளியுடன் 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சில் அவுஸ்ரேலிய வீரர் வோன் 147 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். 112 புள்ளிகள் பெற்றுள்ள இந்திய வீரர் கும்ளே 7 ஆவது இடத்திலுள்ளார்.

# பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து சுயேட்சையாக ராம்ஜெத்மலானி

(லக்னோ)

பிரதமர் வாஜ்பாய் உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோ தொகுதியில் இருந்து மீண்டும் போட்டியிடவுள்ளார். தொடர்ந்து 5 ஆவது முறையாக அங்கு அவர் பாரதீய ஜனதா வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

வாஜ்பாயை எதிர்த்து பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்று காங்கிரஸ் கோரிக்கை விடுத்தது. இதை ஏற்காமல் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ்வாதிக் கட்சி வேட்பாளரை அறிவித்துவிட்டது.

பகுஜன் சமாஜ்வாதிக் கட்சியைத் தொடர்ந்து முலாயம் தலைமையிலான சமாஜ்வாதிக் கட்சியும் மதுகுப்தாவை வேட்பாளராக அறிவித்தது. இருப்பினும் பிரபல வக்கீல் ராம்ஜெத்மலானியை பொது வேட்பாளராக அனைத்துக் கட்சிகளும் ஏற்கவேண்டும் என்று காங்கிரஸ் வற்புறுத்தியது.

இதை முலாயம், மாயாவதி ஆகியோர் ஏற்க மறுத்துவிட்டார்கள். ஆனாலும், காங்கிரஸ், கம்யூனிஸ்ட்டுகள், ராஷ்ட்ரீய ஜனதா தளம், லோக் ஜனசக்தி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் வாஜ்பாயை எதிர்த்துச் சுயேட்சையாகப் போட்டியிட ராம்ஜெத்மலானி முடிவுசெய்துள்ளார்.

இது தொடர்பாக ராம்ஜெத்மலானி கூறியதாவது -

பிரதமர் வாஜ்பாய் எனது நெருங்கிய நண்பர். இருப்பினும் குஜராத் படுகொலைக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கத் தவறியதுடன் அவர்களைக் கதாநாயகர்களாகச் சித்திரித்தால் பாரதீய ஜனதாவில் இருந்து விலகினேன்.

பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுவதாக சிறுபான்மையினர் கருதினால் நாட்டின் அழிவுக்கு அது காரணமாகிவிடும். கடந்த 13 ஆண்டுகளில் வாஜ்பாயின் லக்னோ தொகுதி அனைத்து வகையிலும் வளர்ச்சி அடைந்து இருப்பதாக பாரதீய ஜனதா கூறுகிறது.

பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அடிக்கற்களை நாட்டியது தவிர வேறு ஒன்றும் அங்கு நடக்கவில்லை. அடிக்கற்களை நாட்டுவதில்தான் உலகசாதனை படைத்திருக்கிறார்கள்.

பாரதீய ஜனதாவில் தொலைநோக்கு ஆவணம் - வாஜ்பாய் செயல்திறமை கொண்டவர் என்பதைச் சித்தரிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் உண்மை நிலையை வெளிப்படுத்த ஸ்திரம்மிக்க ஒருவர் தேவை என்பதால்தான் இத்தொகுதியில் நான் போட்டியிடுகிறேன்.

ஜோதிடர்களைக் கலந்து ஆலோசித்து நல்ல முகூர்த்த வேளையில் லக்னோ தொகுதியில் மனுத்தாக்கல் செய்யவுள்ளேன். சிறுபான்மை அமைப்புக்கள் வலியுறுத்தியதின் பேரில்தான் போட்டியிடுகிறேன்.

முலாயம் அரசுக்கு பாரதீய ஜனதா ஆதரவு தந்துவருவதால், அவர் எனக்கு ஆதரவுதரமாட்டார். சமாஜ்வாதிக் கட்சி, பகுஜன் சமாஜ் கடசித் தலைவர்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்களுக்கு எதிரான சக்திகளை வலுப்படுத்தி வருகிறார்கள். இவர்களால் மக்கள் முட்டாளாக்கப்படுகின்றனர் என அவர் கூறினார்.

# ரஜினியை புகழ்ந்து பேசினார் நடிகர் தாமு; மேடையிலிருந்து இறக்கினர் அ.தி.மு.கவினர்!

நடிகர் ரஜினியை புகழ்ந்து அ.தி.மு.க. பிரசாரக்கூட்டத்தில் பேசிய நடிகர் தாமு மேடையில் இருந்து பாதியிலே இறக்கிவிடப்பட்டார்.

தமிழ் சினிமாவில் காமெடி நடிகராக வலம் வரும் தாமு, பல வருடங்களாக அ.தி.மு.க பேச்சாளராகவும் இருந்து வருகிறார். நாடாளுமன்றத் தேர்தலையொட்டி தமிழகம் முழுவதும் அவர் அ.தி.மு.கவுக்காகப் பிரசாரம் செய்து வருகிறார். வட சென்னைப் பகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் அவர் பேசினார். அப்போது கர்நாடகத்தைச் சேர்ந்தவரான ரஜினிகாந்த்கூட காவிரிப் பிரச்சினைக்காகக் குரல் கொடுத்தார், உண்ணாவிரதம் இருந்தார். ஆனால், கருணாநிதி என்ன செய்தார்? என்று கேட்டார்.

இதைக் கேட்டதும் மேடையில் இருந்த அ.தி.மு.க. பிரமுகர்கள் கோபமடைந்தனர்.

மேடையில் இருந்த வட.சென்னை அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் சேகர் பாபு, தாமுவை நோக்கி ஓடினார். ரஜினியைப் பற்றி நமது மேடையில் பேசவேண்டாம். உடனே பேச்சை நிறுத்திவிட்டு மேடையை விட்டு இறங்குங்கள் எனக் கூறினார்.

ரஜனியைப் புகழ்ந்து பேசியதால் மேடையில் வைத்து திட்டுவாங்கிய தாமு, கூனிக் குறுகியபடி பேச்சை நிறுத்திக்கொண்டு மேடைக்குப் பின்புறமாக நின்றுகொண்டார்.

அதேபோல், சென்னை வரவிருந்த அ.தி.மு.க. வேட்பாளர் போஸை எதிர்பார்த்துக் காத்திருந்த ரஜினி ரசிகர்களுக்குப் பெரும் ஏமாற்றம்.

ரஜினி எதிர்த்தபோது அ.தி.மு.கவினர் பயப்பட்டார்கள். இப்போது தானாக முன்வந்து ஆதரவு கொடுத்தாலும் ஏற்க மறுத்து ரஜினிக்கு தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறது அ.தி.மு.க. - ரஜினியின் நிலை இப்படியா ஆகவேண்டும்?

# இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் அமைதியாக நடந்திருப்பது திருப்தியளிக்கிறது!

## யாழ். ஆயர் புத்தாண்டுச் செய்தியில் தெரிவிப்பு

இலங்கையின் நாடாளுமன்றத்திற்கான 13 ஆவது பொதுத்தேர்தல் 38 ஆண்டுகளின் பின்னர் வன்செயல்களற்ற அமைதியான முறையில் நடந்தேறியிருப்பது- மகிழ்வைத் தருகின்றது என யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வெளியிட்டுள்ள புத்தாண்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழ்மக்கள் அனைவரும் மீண்டும் ஒரு தடவை சமாதானத்துக்கான தமது விருப்பில் தாம் ஒன்றாக இருப்பதாக சர்வதேச உலகிற்கு சாட்சியம் பகர்ந்திருக்கிறார்கள். தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது சரித்திரத்தை நாம் எழுதத்தக்க விதமாக இந்ததேர்தலில் வாக்களிக்கவேண்டும் என்ற எமது வேண்டுகோளை ஏற்றுச் செயற்பட்ட தமிழ்மக்கள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றிகூற விரும்புகிறோம்.

யுத்தம் வேண்டாம் சமாதானமே வேண்டும் என்ற இலங்கைவாழ் தமிழ்மக்களின் எண்ணப்பாட்டை முழு உலகும் தெளிவாக உணர்ந்துள்ளவேளையில், இனி நடைபெறவிருக்கும் சம்பவங்கள் அனைத்தும் தமிழ்மக்களுக்குச் சாதகமாகவே அமையும் என நாம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம்.

கடந்த 20 ஆண்டுகால போர் அழிவுகளின் பின்னர், தமிழ்மக்களின் ஒட்டுமொத்தமான இந்த வேண்டுகோளை, சர்வதேச உலகம் ஏற்று தமிழ்மக்களுக்கு நீதியோடு கூடிய ஓர் நிரந்தரத்தீர்வு கிடைக்க தமது பங்களிப்பைச் செய்யவேண்டிய முக்கியமான காலகட்டம் இதுவாகும் என்பதை மிக உறுதியாக வலியுறுத்த விரும்புகிறோம்.

இலங்கை அரசியல் சரித்திர வரலாற்றில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த இரு கட்சிகள் இலங்கை மண்ணின் இறைமையையும், சுதந்திரத்தையும் கருத்திற்கொண்டு இலங்கைவாழ் தமிழ்மக்களுக்காக தம்மை ஏதோவொரு வகையில் விட்டுக்கொடுக்கவேண்டிய ஒரு கால கட்டம் உருவாகவேண்டும். இந்த இரு கட்சிகளின் இருபிரதான தலைவர்களாக ஜனாதிபதியும் பிரதமரும் இந்த விடயத்தில் பிரிந்துநிற்பது இந்தச் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வைத் தரப்போவதில்லை.

பரம்பரை அரசியற் குடும்பத்தைச் சார்ந்த ஜனாதிபதி - இலங்கையில் தமிழ்மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை முதல் முதலில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட சிங்களத் தலைவர் ஆவார். இலங்கை மண்ணில் சமாதான முயற்சிகளையும் ஆரம்பித்தவர் அவரே. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்த தம்மாலான அனைத்து முயற்சிகளையும் கடந்த காலங்களில் செயற்படுத்தியுள்ளார்.

இன்னும் குறிப்பாகச் சொல்வதாயின், இந்த இரண்டு தலைவர்களும் சமாதானத்தை முன் வைத்தே தேர்தலில் போட்டியிட்டு, கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தமது தனிப்பட்ட முரண்பாடுகளைவிட்டு, நாட்டின் நன்மை ஒன்றையே கருத்தில் கொண்டு தேசிய அரசு மூலமாகவோ அல்லது வேறு புரிந்துணர்வு முயற்சிகள் மூலமாகவோ இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்த வேண்டுமென இலங்கைவாழ் தமிழ்மக்கள் அனைவர் பெயராலும் வேண்டிக்கொள்கின்றோம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பகுதியில் - மட்டக்களப்பு பிரதேசத்தில் நிகழ்ந்த மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடாமல் விட முடியாது. இந்தச் சம்பவமானது, தமிழ்மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருக்கின்றது. உயிரிழப்புக்களும், இரத்தக்களரிகளும் பெற்ற இன்றைய அமைதியான நிலையையும் தமிழ்மக்களின் போராட்ட வாழ்வையும், அர்ப்பணத்தையும்- பிரதேசவாதத்தினாலோ, எந்தத் தனிமனித பிரிவினையோ கூறுபோடவோ, கொச்சைப்படுத்தவோ முடியாது என்றே நாம் கருதுகின்றோம்.

தீமையிலிருந்து நன்மையையும், அழிவிலிருந்து ஆக்கத்தையும் தரவல்ல இறைவன் - இந்தச்சம்பவத்தை தமது வல்லமையால் தமிழ்மக்களுக்கு நன்மை பயக்கத்தக்கதாக நிச்சயம் மாற்றுவார்.

சிங்கள தமிழ் புத்தாண்டும் வழமைபோல உயிர்ப்பு விழாக் காலப்பகுதியில் மலர்கின்ற வேளையில், இந்தப் புத்தாண்டினைக் கொண்டாடும் மக்கள் அனைவரையும் நினைத்து மனமகிழ்வோடு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். சிங்கள தமிழ்ப்புத்தாண்டு - நடந்து முடிந்த பொதுத்தேர்தலின் பின்னணியில் இலங்கை மண்ணில் அமைதியையும், சமாதானத்தையும் சுபீட்சமான எதிர் காலத்தைக் கொண்டுவர இறைவன் அருள் பாலிப்பாராக என அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### ஊழியர் நலன்புரிச்சங்க வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

சாவகச்சேரி நகரசபையின் ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வெள்ளி விழாக் கொண்டாட்டமும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் - எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பல முக்கியஸ்தர்கள் உரையாற்றவுள்ளதுடன், பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்தனர். (29)

### கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை - பிற்பகல் 1.30 மணிக்குப் புத்தூர் சோமஸ் கந்த கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது. இதற்கு கல்லூரியின் அதிபர் ச.சாந்தசீலன் தலைமை தாங்கவுள்ளார். பிரதம விருந்தினராக தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதன் கலந்து சிறப்பிககவுள்ளார்.

### இன்றும் நாளையும் பட்மின்ரன் போட்டி

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் 2004 ஆம் ஆண்டுக்கான மாவட்டரீதியிலான விளையாட்டுப் போட்டிகளில் - பட்மின்ரன் போட்டிகள் இந்த மாதம் 9 ஆம், 10 ஆம திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் உள்ளரங்கில் இடம் பெறவுள்ளது.

ஆண், பெண் அணிகளை தெரிவு செய்வதற்காக இடம்பெறும் இந்தப் போட்டியில் வெல்லும் அணிகள் மாகாணப் போட்டிகளில் விளையாட தகுதிபெறும்.

மாகாணப் போட்டிகளில் விளையாட தகுதிபெறும் பட்மின்ரன் போட்டிகளுக்கென விண்ணப்பித்த அணிகளும், விளையாடவுள்ள வேறு அணிகளையும் குறித்த தினங்களில் காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டள்ளனர். (205)

### முலவைச்சந்தியில் களேபரம்

யாழ்.நகர ஆஸ்பத்திரிவீதி முலவைச்சந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இரு இளைஞர் குழுக்களிடையே கோஷ்டி மோதல் இடம் பெற்றது.

கார் ஒன்றை வீதிக்குக் குறுக்காக நிறுத்தியமையே மோதலுக்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.அவசர சேவைப்பிரிவு பொலிஸார் - இரு குழுவினரையும் அவ்விடத்தைவிட்டு அகற்றி, கண்காணிப்பை மேற்கொண்டனர். (111)

### ஆண்களுக்கான சதுரங்கப்போட்டி

இன்று நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் 19 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான வடமராட்சி வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டி நடைபெறுமென்றும், பங்குபற்றவுள்ள பாடசாலைகள் தவறாது குறித்த நேரத்திற்கு கலந்துகொள்ளவேண்டுமென்றும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் தெரிவித்தார்.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்படுவோரை மாவட்டமட்டப் போட்டிகளுக்கு அனுப்பிவைக்கப்படுவர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

### வடமராட்சி வலய சதுரங்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலய மட்ட 19 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான சதுரங்கப் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் 1 ஆம் இடத்தை யாழ்.பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையும், 2 ஆம் இடத்தை யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியும், 3 ஆம் இடத்தை யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன. இந்தப் போட்டிக்கு யாழ்.கப்புது ஏகாம்பர வித்தியாலய ஆசிரியர் கி.விஜயகுமார், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் க.சிவசுதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத் தக்கது. (116)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : மு.ஜெனிபர் ஃலூயிஸ்
முகவரி : உயரப்புலம் ஆனைக்கோட்டை

...வது அகவையில்



பெயர் : கி. லதினா
முகவரி : 34 B, நகரசபை விடுதி மன்னார்வீதி வவுனியா

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


## உள்ளூர்ச் செய்திகள்

### சமாதான நீதிவானாக பதவியேற்றோர்



நாவாந்துறை தெற்கைச் சேர்ந்த சூசைப்பிள்ளை தோமஸ் (தொம்மை) சமீபத்தில் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ். மாவட்ட நிதிவான் நீதிமன்றில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் நாவாந்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை மற்றும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், நாவாந்துறை கொடடடி பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஆகியவற்றின் தலைவரும், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளராகவும் இருந்து வருகிறார். இவர் நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலையின் பழைய மாணவரும் ஆவார். (206)



நாவாந்துறையைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை (குணம்) - அண்மையில் யாழ்.நீதிமன்றில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

நாவாந்துறையில் பல்வேறு சமூகசேவை நிகழ்வுகளிலும் பங்குகொண்டதுடன், யாழ். மாநகரசபையின் அங்கத்தவராகவும் இருந்துள்ளார்.



தென்மராட்சி மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், முழங்காவிலைப் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னுச்சாமி- அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுளார். இவர் அண்மையில் நீதிவான் கந்தசாமி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

வல்லவராயன்கட்டு, கிளிநொச்சி ஆகியவற்றின் சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்தில், தலைவராகவும், முழங்காவில் இணைப்புமன்று, பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், ஆகியவற்றின் செயலாளராக இருந்ததுடன், மேலும் பல பொது அமைப்புக்களின் பல்வேறு பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



அல்வாய் மேற்கைச் சேர்ந்த ஜேசுதாசன் உதயகுமார் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக யாழ் மாவட்ட மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர், கொழும்பு மாநகரசபை, யாழ்.மாநகரசபை ஆகியவற்றின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவர்.

கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் அமெரிக்கமிசன் தமிழ் கலவன் பாடசாலை, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (17)



யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் தொழிலதிபர் சிவநேயர் இரத்தினகோபால் தவகோபால் யாழ்.மாவட்ட மேலதிக நதிவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமானம் செய்துகொண்டுள்ளார்.

சமய சமூக சேவையாளராகிய இவர் யாழ்.மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவராகவும். சாரணிய உதவி மாவட்ட ஆணையாளராகவும், சாரணிய பயிற்றுநர் உதவித் தலைவராகவும், சைவ பரிபாலன சபையின் இணைச்செயலாளராகவும், அபிவிருத்திக்கான சமூக நிறுவனங்களின் வலையமைப்பு (SOND) உத்தியோகத்தராகவும் பணியாற்றி வருகின்றார்.

சிறிய நுண்பாகக் கைத்தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளராகவும், உலகதமிழர் பண்பாட்டு இயக்கத்தின் ஆரம்பகால ஆயுள் உறுப்பினராகவும், இலங்கைக்கிளையின் செயலாளராகவும் பணியாற்றி வரும் இவருக்கு 1989 ஆம் ஆண்டில் மொறிசியஷில் நடைபெற்ற உலகத்தமிழ்ப்பண்பாட்டு இயக்க மாநாட்டில் ‘சிவநேயர்’ என்ற பட்டமும், பதக்கமும் கிடைக்கப் பெற்றவர். சனசமூக நிலையத்திலும், சமாசத்திலும், சம்மோளனத்திலும் பலவருடங்களாகப் பல்வேறு பதவிகளில் பணியாற்றி வருகிறார். நிறுவனங்களில் நிர்வாக உறுப்பினராகச் சேவையாற்றி வருகிறார். என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## களஞ்சிய அறையாக மாறிவரும் யாழ்.நகரப்பகுதி சிவாலயம்

யாழ்போதனா வைத்தியசாலைக்கு முன்பாக புதிதாகத் தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றதால் அயலில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்சர் சிற்றாலயம் களஞ்சிய அறையாக மாறி வருகின்றது.

இந்த ஆலயம் பாராமரிப்போர் இன்றி கைவிடப்பட்டநிலையில் கிடப்பதைச் சாதகமாகப் பயன்படுத்தி, அயலிலுள்ள கடைக்காரர்கள் சோடா வெற்றுப் போத்தல்களை அடுக்கி வைத்துள்ளனர். வங்கிக் கட்டடத்திற்கான புதிய கட்டட நிர்மாணப் பணிகளுக்கான பொருட்களும் அங்கு வைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஒன்றும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் கவனிப்பாரின்றி சிதைந்து காணப்படுகின்றமை பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (206)

## வீதியோரக் குழிகளால் பொதுமக்கள் சிரமம்

யாழ்.காங்கேசன்துறை வீதியில் இன்னமும் மூடப்படாமல் இருக்கும் வீதியோரக்குழிகளால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு சிரமம் ஏற்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தொலைத் தொடர்புக்கான குழாயகள் புதைப்பதற்காக இரண்டு வருடங்களுக்கு முன்பாகத் தோண்டப்பட்ட குழிகள் - வீதி நீளத்திற்கும் நிரப்பப்படாமல் இருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

இரவு நேரங்களில் பயணிப்போர் இக்குழிகளால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும்நிலை உருவாகிவருகின்றது. இதேவேளை, பகலில் சன நெரிசலுள்ள இடங்களில் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்துவதற்கும் இந்தக் குழிகள் தடையாக இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, தோண்டப்பட்டு மூடப்பட்ட குழிகளும் தற்போது உள் நோக்கிப் பாரிய குழிகளை ஏற்படுத்தி வருவதால், அவை மேலும் சிக்கல்களை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (206)



## சிநேகிதியே

# பெண் பற்றிய பிற்போக்கான பார்வைகள் இன்றுவரையும் அகன்று விடவில்லை

யாழ்ப்பாணம் கேணியடி கிழக்குத் திருநெல்வேலி எனும் முகவரியில் வசித்து வரும் ரவீந்திரலால் மகேஸ்வரி என்பவர்



ர.மகேஸ்வரி

மாடு வளர்த்தும், கோழி வளர்த்தும், தோட்டம் செய்தும் முன்னேறி வருகின்றார். தோட்டம் செய்து முன்னேறி வருபவர்கள் மிகக் குறைவாகவுள்ள இந்தச் சமூகத்தில், எப்படி பெண்ணாகிய உங்களால் இதன்மூலம் முன்னேற முடிகின்றது எனக்கேட்டபோது- என்னுடன் தனது உற்பத்தி முயற்சிகள், அதன்மூலம் கிடைத்த பயன்கள் சம்பந்தமாக உரையாடினார். அன்றைய காலத்திலிருந்து இன்றைய காலம்வரை புல் பிடுங்குவதிலிருந்து, நாற்று நடுவதுவரை பெண்கள்தான் முழுப்பங்கு வகிக்கின்றார்கள். இதற்குக் காரணம் வீட்டிலேதோட்டம் இருப்பதும், பொறுப்புணர்ச்சியுடன் பெண்கள் செயற்படுவதும் காரணங்களாக இருக்கலாம். குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி பெண்ணிடம்தான் அதிகமாக இருக்கின்றது. பிள்ளைகளை வளர்ப்பதிலிருந்து கணவனைக் கவனிப்பதுவரை பெண்கள் அக்கறையாக இருக்கின்றனர்.

நான் காலையில் எழுந்ததும் மாட்டில் இருந்து பால் கறந்து பால் பண்ணைக்கு அனுப்பிவிட்டு, வீட்டு வேலைகளை, தோட்ட வேலைகளை முடித்துவிட்டு, (100 இற்கும் மேற்பட்ட கோழி வளர்க்கின்றேன்) கோழிகளுக்கான வேலைகளைச் செய்வேன். இப்படியாக மாறி மாறி வேலைகள் இருப்பதால், உடலுக்கு ஆரோக்கியமாகவும் இருக்கின்றது. இவையெல்லாம் கஷ்டம் என்று சொல்வதற்கில்லை. கஷ்டம் என்று சொல்வதைவிட இனிமையான காலம் என்று தான் சொல்லவேண்டும்.

நான்கு பரப்பில் தக்காளி, பாகற்காய், கத்தரிக்காய் போன்ற மரக்கறி வகைகளை பயிரிடுகின்றேன். நான் முதலில் ஒரு மருத்துவரிடம் மருந்துகள் எடுத்துக் கொடுக்கும் வேலைதான் செய்துவந்தேன். பின்பு தோட்டம் செய்ய விரும்பியதற்குக் காரணம் - எனது மூதாதையினரும் இதே தொழிலைச் செய்து வந்தது ஆகும். இதில் எனக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதனால், இன்று யாரையும் கேட்காமல் தோட்டம் செய்யக்கூடியதாக இருக்கிறது. எனது தோட்ட வேலைகளுக்கு மேலதிகமாக வேலைசெய்வதற்குச் சில பெண்களை வைத்திருக்கிறேன். எனது தோட்டத்தில் வேலை செய்யவரும் பெண்கள் கஷ்டப்பட்டவர்களாகத்தான் இருக்கின்றார்கள்.

நான் அவர்களைத் தகுந்தமுறையில் கவனித்து வருகின்றேன். என்னையும் அவர்களையும் பிரித்துப் பார்ப்பதில்லை. அவர்களும் தங்களுடைய தோட்டம்போல நாட்டத்துடன் வேலையில் ஈடுபடுவார்கள். வைகாசி முதற்பகுதியில் பயிர் நட்டு, 3 மாதம் கழிந்ததும் காய்களைப் பிடுங்கிவிடலாம்.

வீட்டில் எந்தப் பிரச்சினை என்றாலும், கவலை என்றாலும் தோட்டத்திற்கு வரும்போது எல்லோரும் ஒன்றாகக்கூடி வேலை செய்யும்போது, கவலை இல்லாமல் போய்விடும். எனது தோட்டத்தில் இருந்தே காய்கறிகளைப் பிடுங்கி சமைப்பதால், நல்ல, குளிர்மையான, புதிய காய்கறிகளைப் பெற முடிகின்றது. ஆரம்பகாலங்களில் பண்டமாற்றுமுறை இருந்து வந்தது. அதேபோல் இன்றும் என்னிடமுள்ள காய்கறிகளைக் கொடுத்து பக்கத்து தோட்டத்திலுள்ள காய்கறிகளை வாங்கக்கூடியதாக இருந்தது.

வீட்டுக்கு வீடு தோட்டம் இருந்தால் நல்லது. பெரியளவில் இல்லாது விடினும் சிறிய அளவில் வீட்டின் பின்புறம், கிணத்தடிக்குப் பக்கமாகப் பயிரிட்டால் - அவசியத் தேவைகளுக்கு உதவும். இன்று வெளிநாட்டிலிருந்து பணம் வருவதால் தோட்டம் செய்வதை விட்டுவிட்டார்கள். இது எமக்குத் தான் பிற்காலத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும். இன்றையகாலத்து பெண்கள் நிலத்தில் வெறுங்காலுடன் நடக்கவே கூச்சப்படுகின்றார்கள் என்றால், இவர்களுக்கு எப்படி மண்ணின் அருமை தெரியும்.

இது எந்தவித முதலீடும் இல்லாமல உடல் உழைப்பினைக் கொண்டு பெண்களும் செய்யக்கூடிய தொழிலாகும். அத்துடன், சுதந்திரமானதும் எவரின் ஆதிக்கத்தின் கீழும் இல்லாமல் வசதிக்கேற்ப செய்யக்கூடிதாகவும் இருக்கின்றது. இன்று ஏ-9 பாதை திறந்து வெளியிடங்களிலிருந்து காய்கறிகள் இங்கே வருவதால், எமது தோட்டத்தின் மரக்கறிகளின் விலை குறைவாக இருக்கின்றது. இதனால், நாங்கள்தான் பாதிக்கப்படுகின்றோம்.

பெண்களைப் பற்றி சமூகத்தின் பார்வை வித்தியாசமாக இருக்கின்றது. அது நல்லவையாக எப்பொழுதும் அமையப்போவதுமில்லை. எனது கணவர் கூட்டுறவுச் சங்கத்தில் எழுதுவினைஞராக வேலை செய்கிறார். அந்தச் சம்பளமும் இந்தத் தோட்டத்திலிருந்து வரும் வருமானத்தையும் கொண்டுதான் வீடே கட்டினோம். என்ன கஷ்ரப்பட்டு உழைத்தாலும் எனககுப் பிள்ளை இல்லாத காரணத்தால், சமூகம் ஏன் இவர்கள் உழைக்கின்றார்கள்? யாருக்காக உழைக்கின்றார்கள்? என்று எம்மை வித்தியாசமாகப்பார்க்கிறது. இதை நினைக்கின்றபோது தான் கவலையாக இருக்கின்றது.

என்ன வாழ்க்கையாக இருந்தாலும், அதாவது ஏழையாக இருந்தாலும் பணக்காரராக இருந்தாலும், அம்மா என்று சொல்ல ஒரு பிள்ளை இல்லை என்றால், எல்லோருக்கும் கவலையாகத்தான் இருக்கும். அது பெண்ணுக்குத்தான் கூடுதலான பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

ஓய்வு கிடைக்கின்றபோது தொலைக்காட்சி பார்ப்பேன். ஏனெனில், நாடகங்களில் பெண்கள் பாத்திரம் கூடுதலாக இருப்பதால், அந்த நாடகங்கள் என்னையும் ஈர்த்துவிடும். இரண்டு நாடகங்கள் மட்டும் பார்ப்பேன். கெட்டவிடயமோ, நல்ல விடயமோ தொலைக்காட்சியூடாக மக்களுக்கு இலகுவாகச் சென்றடையக் கூடியதாக இருக்கின்றது. அதனால், வீட்டுப் பெண்களாகிய எங்களையும் ஈர்க்கும் சக்தி தொலைக்காட்சிக்குண்டு.

என் வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவமாகச் சொல்லப்போனால் - இந்திய இராணுவ காலப்பகுதியில் விடுதலைப் புலி என்று சொல்லி இந்திய இராணுவம் எனது தங்கையைக் கைதுசெய்துகொண்டு சென்று விட்டார்கள். தங்கையைத் தேடி இந்திய இராணுவ முகாமிற்குச் சென்றபோது, என்னையும் என்னோடு கூடவந்த மச்சாளையும் கைதுசெய்து காங்கேசன்துறையிலுள்ள இந்திய இராணுவ முகாமில் அடைத்துவிட்டார்கள். 7 மாதங்கள் அடைபட்டுக் கிடந்தோம். இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டுப்போகும் போதுதான் எங்களை விடுதலை செய்தார்கள்.

இந்திய இராணுவத்தின் பிடியிலிருந்து உயிர் பிழைத்து மீண்டும் வந்தபோது, எங்களுடைய சமூகத்தில் எங்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை. எங்களை வித்தியாசமாகப் பார்த்தார்கள். இப்படியாகப் பெண்தொடர்பாக சமூகத்தின் பார்வை பிற்போக்கான நிலையிலிருந்து இன்னும் விடுபடவில்லை என்பதை நினைக்கும்போது கவலையாகத்தான் இருக்கிறது.

பெண்ணானவள் கல்வியில் முன்னேறி நாலு பேர் புகழ்கூடியளவில் இருந்தாலும், அவளுக்குள்ளும் நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. சுதந்திரம் - வீட்டுக்குள்ளே இருந்து வெளியே வந்தும் கிடைக்கவில்லை. ஆகவே, விடுதலை பெண்ணிற்கு கிடைப்பது என்பது - சமூகத்தில் படித்து முன்னேறி வந்தாலும், படிக்காமல் வீட்டிற்குள் இருந்தாலும் சமூகத்தின் பார்வையிலே இருக்கின்றது. முதலில் இந்தச் சமூகம் திருந்தவேண்டும். ஆணோ - பெண்ணோ என்று தெரியாமல் ஜீன்ஸ், ரீசேட் உடுத்திப்போகும் பெண்ணிடம் விடுதலை இருக்கப்போவதில்லை.

பெண்ணாகப் பிறந்து, வாழ்நாளில் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தமது கஷ்டங்களை யாருக்குமே சொல்வதில்லை. வீட்டில் வளரும்போதும், படிக்கின்றபோதும், வேலை செய்கின்ற போதும், திருமண வயது வந்ததும் அழகில்லை என்றும், சீதனம் இல்லை என்றும் புறக்கணிக்கும்போது இப்படியாக நிறையப் பிரச்சினைகள் எழுகின்றன.

குப்பைகள் போடாதீர்கள் என்று எழுதி போட்டிருந்தாலும் - அங்கேதான் நிறையக் குப்பைகள் காணப்படும். அதேபோல், கூட்டம் கூடி மேடைகளில் பெண்கள் விடுதலை வேணடும் என்று அடிக்கடி சொல்லும் இடங்களில் தான் அநேகமாக பெண் விடுதலை குறைவாக இருக்கின்றது.

பெண் விடுதலை என்பது பெண்ணின் மீது தலையீடு இல்லாமல் அவளை தனியே விட்டு, அவளே நல்ல முடிவெடுக்கும் நிலை வந்தால் - அன்றுதான் பெண்விடுதலைக்கான ஆரம்பம் என்று சொல்வேன் என்று தனது கருத்தினையும் சொல்லிமுடித்தார்.

நேர்காணல் - செல்வா.

# சமூகத்தின் பார்வையில் பெண்கள்

'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்' என்றார் பாரதியார். ஆனால், இந்தக்கூற்று எமது சமூகத்தைப் பொறுத்தவரையில் எந்தளவிற்குப் பொருத்தமானது என்பது கேள்விக்கிடமாகவேயுள்ளது.



ஏனைய சமூகங்களைப் பொறுத்தவரையில் பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள நிலையில், எமது சமூகம் தொன்று தொட்டு பேணிவந்த இறுக்கமான நிலையில், நின்று தளர்த்திகொள்ளாமலே இருக்கின்றது என்று கூறலாம்.

'பொம்பிளை சிரிச்சால் போச்சு' எனப் பழைய வேதாந்தங்களை பேசுவோர் இன்றும் நம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர். எவ்வளவுதான் படித்தாலும், ஆண்களுக்கு வழங்கும் அந்தஸ்தையும் உரிமைகளையும் பெண்களுக்குச் சமூகம் வழங்குவதில்லை.

இந்த நிலைமை தொன்றுதொட்டே இருந்து வருகின்றது. சங்ககாலத்திலே கவித்துவம் நிறைந்த ஔவையார், காக்கை பாடினியார் போன்ற பல பெண் புலவர்கள் இருந்தபோதும், இன்றுவரை கவிஞனுககோ, புலவனுக்கோ சமமான பெண்கள் வழக்கத்தில் இல்லாமையைக் குறிப்பிடலாம்.

அடுத்து சமூகம் பெண்களை வளர்த்தெடுக்கின்றதா? அல்லது வார்த்தெடுக்கின்றதா? என்கின்ற வினா எழுகின்றது. சாதாரணமாக வளர்ததல் என்றால் - சுயபோக்கில் வளரவிட்டு, நெறிப்படுத்த வேண்டிய இடத்தில் நெறிப்படுத்தலாகும். மாறாக வார்த்தெடுத்தல் என்றால் நாம விரும்பியபடி ஒரு அச்சிலிட்டு, நமது விருப்பிற்கு ஏற்றபடி உருவாக்கிக் கொள்ளலாகும். இன்று எமது பெண்கள் எழுதாச்சட்டங்களாகவே பல அச்சுக்களிலே இட்டு வார்த்தெடுக்கப்படுகின்றார்கள்.

இவ்வாறு நமது சமூகத்தால் வளர்க்கப்படும் பெண்ணினது ஆளுமைகள், ஆற்றல்கள் முடக்கப்படுகின்றன. சுயமாகச் சிந்தித்துச் செயற்படும் அளவுக்கு நமது பெண்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதில்லை. இதனால் தனது ஆற்றல், ஆளுமை, திறமை என்பவற்றை அறிந்துகொள்ளமுடியாமல், தனக்குத்தானே ஒரு குறுகிய வட்டத்தை வரைந்து கொண்டு வாழும் நிலைமைக்கு பெண்கள் தள்ளப்பட்டுள்ளனர். பெண் என்றால், இப்படித்தான் வாழவேண்டும் என அவள் தன்னையே நியாயப்படுத்திக்கொள்கின்றாள். இப்படியும் வாழலாமா என பெண் ஒருபோதும் சிந்திப்பதில்லை. இதை எமது சமூகம் காலங்காலமாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று செய்துவந்துள்ளது.

இன்று எமது சமூகத்தில் பல பெண்கள் படித்துப்பட்டம் பெற்றுள்ளார்கள். உயர் பதவிகள் வகிக்கின்றார்கள் எனப் பலரும் கூறமுடியும். ஆனால், இவற்றிற்குப் பின்னால், இவர்கள் சுயமாகச் செயற்படுகின்றார்களா? என்பது சந்தேகத்தின்பாற்பட்டதே. ஒரு பெண்ணிற்கு ஒரு தொழில்வாய்ப்பு கிடைக்கின்றபோது - அத்தொழில்வாய்ப்பை ஏற்றுக்கொள்வதா? இல்லையா என்பதை தீர்மானிப்பவர்களாக குறிப்பிட்ட பெண்ணின் தந்தையோ, சகோதரனோ காணப்படுகின்றனர். அதாவது, பெண்கள் தொடர்பான தீர்மானங்கள் பெரும்பாலும் எமது சமூகத்திலே ஆண்களாலேயே எடுக்கப்படுகின்றன.

பெண் இயல்புகள் பெண்ணாகப் பிறந்ததால் ஏற்பட்டவையல்ல. பெண் இயல்புகள் குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்த்தெடுக்கப்படுகின்ற சமூக கலாசார நிலைமைகளால் ஏற்படுகின்றன. நடத்தைவாத உளவியலாளர்களது கருத்துப்படி - பெண் குழந்தைகளை ஆண்களைப் போன்று மனோதிடத்துடன் வளர்த்தெடுக்க முடியுமென்கிறார்கள்.

அடுத்து எமது சமூகம் - பெண்களை உடலியல்ரீதியாகவே பார்க்கின்றது. பெண்களை உளவியல்ரீதியாக நோக்குவதில்லை என்பதற்கு அப்பால், சமூகத்தால் நோக்க முடிவதில்லை என்பதே உண்மையாகும். ஒரு பெண் பருவமடைந்தபின், அவளது உடலில் மாற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூக அமைப்பு - அவளது உளவியல் மாற்றத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பெண் பருவமடைந்துவிட்டால், ஆண்களுடன் கதைக்கக்கூடாது, நிமிர்ந்து நடக்கக்கூடாது, இப்படித்தான் இருக்கவேண்டும் என்றெல்லாம் கட்டுப்பாடுகளைப் போடும் சமூகம் - அவளது மன உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தவறுகின்றது.

இந்தக் காலப்பகுதியில்தான் ஒரு பெண்ணிற்கு அதீத மனவெழுச்சி ஏற்படுகின்றது. இந்தக் காலப்பகுதியில் நெறிப்படுத்தப்படாததும், முக்கியத்துவம் அளிக்கப்படாததுமான மன எழுச்சிகள் தவறான தீர்மானத்திற்கு இட்டுச்செல்கின்றன. ஒரு பெண்ணாக இருக்கும் தாய்கூட இந்தச் சந்தர்ப்பத்தைப் பற்றி அதாவது, தனது மகளின் மனஎழுச்சிகள், உணர்வுகள் பற்றி எண்ணிப்பார்ப்பதில்லை. ஏனெனில், ஒரே சமுதாயப் பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்ட பெண்ணாகையால், இது பற்றி சிந்திக்கமுடியாமலுள்ளது.

இவ்வாறு சமூகத்தால் பெண்கள் வளர்த்தெடுக்கப்படும் முறையானது - பெண்ணின் பிற்கால வாழ்க்கையிலே பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. ஒரு பெண்ணானவள் கட்டிளம் பருவத்தில் சமூக அமைப்பால் ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடுகளைத் தவறாகப் புரிந்துகொள்கின்றாள். சமூகத்தில் ஆண்-பெண் உறவு என்பது ஏதோ தவறானது. பெண்கள் தமது கருத்துக்களை வெளிப்படையாகக் கூறக்கூடாது போன்ற சில எண்ணக்கருக்கள் அவளது மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. இவை அவள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், பதவியில் இருந்தாலும், அடி மனதிலிருந்து அவ்வப்போது வெளிப்படுகின்றது. இதனால், அவள் வேலை செய்யும் அலுவலகத்திலோ அல்லது பாடசாலையிலோ தானாகவே ஒதுங்கிக்கொள்கின்றாள். தன்னில் தான் நம்பிக்கை அற்றவளாக தலைமைத்துவத்தைக் கண்டு அச்சமடைகின்றாள். மேலும் இவை அவளது குடும்பவாழ்விலே பல பிரச்சினைகளை உருவாக்குகின்றன. தனது கணவன் வேறு பெண்களுடன் கதைப்பதோ அல்லது சாதாரணமாகப் பழகுவதோ ஏதோ தவறானது என்ற எண்ணம் அவளது மனதில் தோன்றுகின்றது. இதனால், குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றன.

சமூகம் ஆண்கள் மத்தியிலும் தவறான எண்ணக்கருக்களை உருவாக்குகின்றது. பெண் என்பவள் அடக்கப்படவேண்டியவள் என்றும், அடங்கிப்போக வேண்டியவள் என்றும் பல ஆண்கள் எண்ணுவதற்கு சமூகம் ஒருவகையில் காரணமாகின்றது. இந்த ஆணாதிக்கம் ஒரு ஆணைப் பொறுத்தவரையில் சகோதரிகளில் ஆரம்பிக்கப்பட்டு மனைவியில் முடிவடைகின்றது. எனவே - எமது சமூகம் பெண்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டினை மீளாய்வு செய்தல்வேண்டும். பெண்கள் எந்தவகையிலும் ஆண்களுக்குக் குறைந்தவர்கள் அல்ல என்பதை உணர்ந்து, அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களது திறமைகள், ஆளுமைகள் என்பவற்றுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்வேண்டும்.

- லெ.நிலா -

# பிஞ்சுமுகத்தின் தேடல்



அக்காவின்ரை கைகள் வேகமாக இயங் கிக்கொண்டிருந்தன. எனக்கு அதைப் பார்க்க வியப்பாக இருந்தது அந்த விரல்களில் ஒரு சுறுசுறுப்பு. தேவையான பூவைச் சட்டென்று எடுத்து முடியும் வேகத்தில் மாலையின் அழகு கூடிக்கொண்டு போனது. மஞ்சள், வெள்ளை, சிவப்பு, அதுக்குப்பிறகு பச்சை இலை ஒரே அளவாக அவள் கட்டிக்கொண்டிருந்தாள். ஒருக்கா அவள் பூவை எடுக்கும்போது எண் ணிபபார்க்கலாம் எண்டு நான் எண்ணத் தொடங்க... அக்காவின்ரை விரல்களில் வேகம் என்னைக் குழப்பிவிட்டது. 'அக்கா'! ... நான் கூப்பிட்டேன் அவள் நிமிர்ந்து என்னைப் பாரா மல், தன்ரை வேலையைச் செய்துகொண் டிருந் தாள். அக்கா எப்போது மாலையை கட்டி முடிப் பேன் எண்டு நினைத்து கட்டிக்கொண்டிருந்தாள். எனக்கு வயிறு கடித்தது. பின்னேரமாகியும் இன்னும் ஒண்டும் சாப்பிடவில்லை. மெல்ல எழும்பிப்போய் அடுக்களைக்குள் ஏதும் கிடைக் குமோ எண்டு சுத்திப்பாத்தன். சட்டி, பானை யெணடு எங்களிட்டைப் பெரிசா ஒண்டுமில்லை. ஒரு சின்ன மண்குடம், இரண்டு மண்சட்டி, ஒரு அகப்பை, இரண்டு அலுமினியப் பேணி இவ்வளவுதான். தண்ணியைக் குடிப்பம் எண்டு அலுமினியப் பேணியை எடுத்துக்கொண்டு குடத்தைச் சரிச்சன் - அதுக்கை ஒரு சொட்டுத் தண்ணியும் இல்லை. எனக்குக் கோபம் வந் தது... இப்ப ஆரோடை கோவிக்கிறது. வெளியே வந்தேன். அக்காவின்ரை வேலை முடியும் போலை தெரிஞ்சுது. கட்டினமாலையைத் தூக்கிப் பிடித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த மாலைக்குள்ளாலை அவளின்ரை முகம் தெரியுது. என்ரை எண்ணம் எங்கேயே சென் றது.....

அண்டைக்கு எங்கடை வீட்டிலை அக்கா வின்ரை கலியாணம் எண்டு ஒரே ஆரவாரம். நட்டுவமேளமும், நாதஸ்வரமும் ஒலிபெருக்கி யிலை போட்டுகிடந்தது. வாசலை பழவாழை யும் செவ்விளநீர்க் குலையும் கட்டிச் சோடனை யும் செய்திருந்தினம். அம்மாவும் அப்பாவும் வாறவையை வரவேற்க, நான் வாசலிலை நிறைகுடத்துக்குப் பக்கத்திலை நிண்டு அவர் களுக்குச் சந்தணப்பொட்டு வைச்சுவிட்டன். என்ரை சிநேகிதி மாலினிதான் குங்குமம் வைசசு விட்டாள். இரண்டுபேரும் பட்டுப்பாவடையும் சட்டையும் போட்டு, தலையிலை அக்கா கட் டித்தந்த கனகாம்பரப் பூமாலையை அலிஸ் பாண்ட் போலை வைச்சுக் கட்டியிருந்தோம். அக்காதான் எங்களை வெளிக்கிடுத்திவிட் டாள். இரண்டு பேருக்கும் பட்டுப்பாவடை - ஒரே மாதிரி அக்காதான் தைச்சுத்தந்தா. அந்தப் பாவடையின்ரை கரை கனகாம்பரப் பூவின்ரை நிறம். அதனாலை தலைக்கு கனகாம்பரப் பூமாலை கட்டவேணும் என்று அக்கா கட்டி விட்டாள். நானும் மாலினியும் இரண்டைப் பிள்ளையள்போல இருந்தம். பெரிய கண்ணா டிக்கு முன்னாலை நிண்டு இடுப்பிலை கையை வைச்சுக்கொண்டு இரண்டு பேரும் ஒருக்கா டான்ஸ் ஆடிப்பாத்தம். பள்ளிக்கூடத்திலை டான்ஸ் ரீச்சர் பழக்கிறவா. ஆண்டு மூண்டு படிக்கிற எங்களுக்கு ரீச்சரிலை நல்லவிருப்பம். அவவும் எங்கடை அக்காவைப் போலை நல்ல வடிவு... அக்கா சொன்னாள் - பிள்ளையள் மாப்பிள்ளை வீட்டார் வரப்போகினம் - போய் வாசலிலை நில்லுங்கோ. நான் அக்காவைப் பாத்தன். அம்மன் சிலைபோல வடிவாயிருந் தாள். அவளின்ரை முகம் சூரியனைப் போலை பிரகாசமாக இருந்தது. அக்கா எங்கடை கன் னத்திலை சின்னக் கறுத்தப்பொட்டு வைச்சு விட்டாள். நான் கண்ணாடியில் பாத்தன் - எட! நானும் நல்ல வடிவுதான். அக்கா! ஒருக்கா எங்களுக்கு நடுவிலை நில்லு! நான் படம் பிடிக்கப்போறன். அக்கா நடுவில வந்து நிண் டாள். அக்காவின்ரை புடவை சிவப்பு. எங்கடை பாவாடை பச்சை - நல்ல நிறப்பொருத்தம். நான மனத்தில் படம்பிடித்துவிட்டேன்.

வாசலிலை கார் வந்து நின்றது. எல்லோ ரும் இறங்கிவந்தினம். ஐயையே இது என்ன கோலம் எனக்கு மனம் சுருங்கிவிட்டது. எல் லாப் பெண்களும் சுரிதாரில்.... ஆடிக்கொண்டு வந்தார்கள். எல்லாமே நல்லகுண்டு. அம்மாவும் அப்பாவும் அவர்களை மகிழ்வோடு வரவேற் றார்கள். நான் சந்தனம் வைக்காமல் நின்றேன். மாலினி கையில் கிள்ளினாள். நான் சந்தனக் கிண்ணியை வேண்டா வெறுப்போடு நீட்டி னேன். ஒரு குண்டு என்ரை கன்னத்தில் முத்த மிட்டது. ஐயோ!... இதென்ன.... சவப்பொட் டின்ரை வாசனை! இப்ப கலியாண வீட்டிலை பொருந்தாத யோசினை வருகுது. இன்னொரு கார் வந்தது அதிலையிருந்து ஆம்பிளைக ளைப் போலை நீட்டுக் காற்சட்டையும் சேட் டும் போட்ட இரண்டு பொம்பிளையள் இறங்கி வந்தினம் - இப்ப முந்தின உடுப்புப் பரவா யிலலை எண்டு மாலினி சொன்னாள். போடி! விசரி கலியாணவீட்டிற்கு இது சரிவராது. எங்கடை சொந்தமான பண்பாடு என்று ரீச்சர் படிப்பிச்சதை மறந்துவிட்டியோடி!.... சரி சரி இப்ப மாப்பிள்ளை வாரார். நல்ல காலம்! அவர் வேட்டி கட்டி தலைப்பாகையுடன் தமிழன்போல... அக்காவுக்கு நல்ல சோடி தான்! என்ரை மனதுக்கை ஒரு பூரிப்பு. சந்த ணத்தை அவச ரமாக எடுத்து அவருக்கு நீட் டினேன் அவர் என்னைப் பார்த் துச் சிரித் துக்கொண்டே திருமகள்! நீயே வைச்சு விடன்! என் றார். எனக் குத் திடீரென வெக்கம் வந் தது. சமாளித் துக்கொண்டு அந்தப் பெரிய நெற்றியில் என்ரை வலக்கை மோதி ரவிரலால் சின்னப்பொட்டு வைச்சு விட்டன்.



கலியாணம் நல்லபடி நடந்தது. இரண்டு கிழமை அக்காவும், அத்தானும் நல்ல சந் தோஷமாக எல்லா இடமும் போய்வந்தினம். இங்கிலீசிலை அவர் பேசிறது ஒண்டுதான் எனக்குப் பிடிக்கவில்லை. அக்காவைப் பிறகு கூப்பிடுறதாம் என்று சொல்லிவிட்டு, அத்தான் வெளிநாட்டுக்குப் போனார். இப்ப இரண்டு வருடம் ஓடிவிட்டது. அதுக்குள் நாங்கள் இடம்பெயர்ந்தோம். அம்மாவும், அப்பாவும் வெளிநாட்டு மாப்பிள்ளையோட தொடர்பு கொள்ளமுடியவில்லை என்ற கவலையில் நோயாளியாகிவிட்டனர். இரண்டு பேரும் படுக் கையில். அக்காதான் எங்கடை சாப்பாட்டிற்கு ஏதாவது உழைக்கவேண்டும். சொந்தவீடும் பொருட்களும் அங்கே! நாங்கள் கோயில் காணியிலை சின்னவீடு கட்டிக் கொண்டி ருக்கிறம். அப்பா எதுவும் பேசமாட்டார். அம்மா தாயே! ஈஸ்வரி! காப்பாத்தடி! எண்டு எப்பவும் கும்பிட்டபடிதான். அக்காவின்ரை இரண்டு சோடி காப்பை வித்து இந்த வீட்டைக்கட்டினம். அக்காதான் பூமரம் நட்டாள் - நித்திய கல் யாணி, செவ்வரத்தை, பொன்னொச்சி, பிச்சி, மல்லிகை, கனகாம்பரம் எண்டு பல நிறத்தில் பூத்துக்குலுங்கும். பிள்ளையார் கோவில் ஐயர் தான் அக்காவின்ரை மாலைகளுக்கு ஓடர் எடுத்துத்தாறவர். நான் பூவைப்பறிச்சுக் குடுப் பன். வாழைநார் கிழித்துக் குடுப்பன். அக்கா மளமளவெண்டு கட்டுவாள். மாலை கட்டும் போது அக்காவின்ரை முகத்தைப் பாப்பன். அவள் தன்னுடைய பெரிய கவலையை மறைச்சு வைச்சுப்போட்டு, எங்களுக்குச் சோறு போடச் சுறுசுறுப்பாக உழைக்கிறாள். என் னைப் படிக்க வைக்கவேணுமெண்டு ஆசைப் படுகிறாள். அவள் தன்ரை பசியைப் பொறுத் துக்கொண்டு எங்களுக்குச் சாப்பாடு தருகி றாள். அவள் எங்களுக்கு இப்ப கடவுள்போல இருக்கிறாள்.

போன மாதம் அக்கா ஒரு கடிதம் எழுதி, அத்தான் கலியாணத்தின்போது கொடுத்த விலாசத்துக்குப் போட்டாள். அதுபோய்சேரும் எண்டு நம்பியிருக்கிறாள். எனக்கு அவளைப் பாக்கிறபோதெல்லாம் ஆச்சரியம்தான்! அவ ளுக்கு நான் எப்படி உதவிசெய்யலாம். கோயில் ஐயரைப் போய் கேட்டன். அவர்தான் சொன் னார். நான் ஒரு அறிவிப்பு எழுதித்தாறன். அதை உங்கடை வாசலில் போட்டால் நல் லது. அவர் சொன்னபடியே அடுத்த நாள் அறிவிப்புப் பலகை வந்துவிட்டது 'இங்கே ஓடருக்கு மாலை கட்டிக்கொடுக்கப்படும்' அதுக்குப்பிறகு எங்கடை வீட்டிற்கே மாலை ஓடர் வருகிறது. அக்காதான் கட்டுகிறாள். அந்த வருமானத்திலைதான் நாலுபேரும் சீவிக்கிறம். நான் என்ன செய்யலாம்... இந்தக் கேள்விக்கு விடை தேடுகிறேன். அக்காவிடமே கேட்கலாமா? ஆனால், அவள் இப்போது அதி கம் பேசுவதிலலை. எனக்கு மூளை வேலை செய்தது. எங்கடை ரீச்சர் வாறகிழமை வெளி நாடு போறதெண்டு சொன்னவா. அவவிட்டை அத்தான்ரை முகவரியைக் கொடுத்துவிடுவம் என்ற முடிவோடை வெளியே வந்தன். இப்ப பசிதெரியல்லை. மாலை கட்டக்குடுத்தவர் வந்து மாலையை வாங்கிப்போட்டு, அக்கா விட்டை காசு கொடுக்கிறார். அக்கா அதை வாங்கி எண்ணுகிறாள். 150 ரூபா - நான் அக்காவைப் பார்த்தேன். அவள் முகத்தில் உழைப்பின் வெற்றி வெளிச்சமாய்த் தெரிந் தது. அவள் கைகளைப் பற்றிக்கொண்டேன்.

**மனோன்மணி சண்முகதாஸ்.**

# வீட்டை அரட்டை அரங்கமாக்காதீர்கள்



நம் நாட்டில் பெரும்பாலான பெண்கள் அரட்டையைத்தான் அதிகம் விரும்புகிறார்கள். தேவையே இல்லாத விடயங் கள் பற்றி நண்பிகளிடம் பேசு வதில் மிக ஆர்வம் காட்டும் பெண்கள் பயனுள்ளவற்றைப் பேசுவதை வெறுக்கிறார்கள்.

இன்னும் சிலர் இருக்கிறார் கள். பக்கத்து வீட்டுப் பெண் கள் என்ன உடைகள், நகை கள் உடுத்திருக்கிறார்கள் என்பதை நோட்டமிட்டு அதில் உள்ளகுறைகளை மற்ற பெண்களிடம் சொல்லி பெரு மைப்பட்டுக் கொள்கிறார்கள்.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொடர்களைப் பற்றிப் பேசி, காலத்தை வீணடிக்கும் பெண்களும் இருக்கிறார்கள். அண்மைக் காலமாகச் சில பெண்கள் - கிரிக்கெட் ஆட் டம் பற்றி நாள் முழுக்கப் பேசுகிறார்கள்.

நீங்களும் இந்த வகையினரைச் சேர்ந்தவராக இருந்தால், உங்களை இப்போதே திருத்திக் கொள்வது நல்லது. இல்லை என்றால் நாள் முழுக்க அரட்டை மயமாக மாறி, ஒரு கால கட்டத்தில் வாழ்க்கையே திகில் மாயமாக மாறிவிடும்.

இப்படிப்பட்ட அரட்டை அடிக்கும் பெண்களுக்குச் சில ஆலோசனை பந்துகள் போல வீசுகின்றோம். அதனை எதிர்கொண்டு வெற்றிக் கோப்பையைக் கைப்பற்ற வாழ்த் துக்கள். அரட்டைக்குப் பதிலாக தெருவில் உள்ள பெண்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து ஏதாவது ஒரு ஆக்கபூர்வமான காரியங்களில் ஈடுபடலாம்.

சுத்தம் சோறு போடும் என்பார்கள். அதனால் உங்கள் தெருவில் குப்பை கிடந்தால், கூட்டாகச் சேர்ந்து குறிப்பிட்ட நாளில் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபடலாம்.

விஷேட நாட்களின்போது, பக்கத்து வீட்டுப் பெண்கள் அனைவருக்கும் தேவையான பொருட்களின் மொத்தப் பட்டியலைத் தயார் செய்து, அந்தக் குழுவிலுள்ள இரண்டு பேர் கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிவரும் பொறுப்பை ஒப்படைக்கலாம்.

தைப்பொங்கல், தீபாவளி, கிறிஸ்மஸ் போன்ற பண்டிகைகளின்போது - லட்டு, கேக் போன்ற இனிப்பு வகைகளையும் எல்லோரும் ஒன்றாக இணைந்து தயாரிக்கலாம். இதனால், சிரமம் குறைவதோடு வேலையும் விரைவாக முடியும்.

5 பேர் அல்லது 10 பேர் ஒன்றாக இணைந்து, அனைவருக்கும் பிடித்தமான பத் திரிகைகளை வாங்கி உங்களுக்குள் பரிமாற்றம் செய்து வாசித்துக் கொள்ளலாம்.

உங்களுக்குக் கிடைக்கின்ற சில நிமிட ஓய்வு நேரத்தை வீணடிக்காமல் தையல் இயந்திரத்தைப் பயன்படுத்தி, பல தையல் முறைகளைத் தைக்கப் பழகிக்கொள்ளலாம். இதன் மூலம் உங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதோடு, வருமானத்தையும் பெருக்கிக் கொள்ளமுடியும். அயல்வீட்டுப் பெண் யாராவது உடல் நலமின்றி இருந்தால் அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகளைச் செய்து கொடுக்கலாம். சாப் பாடுகளைத் தயாரித்து நோய் வாய்ப்பட்டவர்வீட்டுக்குக் கொடுத்தனுப்பலாம். இவை பயனுடையதாக அமையும்.

# வாகனங்கள் ஓடும் பெண்களுக்கு




இப்போது கோடைகாலம். அடடா என்ன வெய்யல் இப்போதே இந்தக்காய்ச்சல் காய்கிறதே. பங்குனி வெய்யில் எப்படியிருக்குமோ? அதுவும், வியர்வை வேறு மோசமாகிக் கொண்டிருக்கின் றதே என்ற கவலை நம்முன் இப்போதே ஆரம் பித்துவிட்டது. எவ்வளவுதான் வெய்யில் வெப்பம் எம்மை எரித்தாலும் வெளியில் போகவேண்டும் என்றநிலை ஏற்பட்டால் போய்தானே ஆகவேண்டும்.

இன்றைய நிலையில் வாகனங்களை ஓடும் பெண்கள் நிறையப்பேர். இப்பெண்களின் உடல் நிறம் நிச்சயம் குறைந்துபோகும். முகத்திலும், கைகளிலும் மட்டுமன்றி தலையிலும் அதிகமான தூசி படிகின்றது. இதைத்தவிர்க்க என்ன வழி? பொதுவாகவே வாகனங்களை ஓடும்போது, ஒருவித ரென்சன்ஓயாமல் இருக்கும். இதனால் பாதிக்கப்படும் தசைகளை எப்படி டென்ஷனில் இருந்து மீட்பது என்பது பற்றிப் பார்ப்போம்.

மேற்கூறப்பட்ட பாதிப்புக்கள் கோடையில் வெளியில் செல்லும் எல்லோருக்குமே ஏற்படும் என்றாலும், வாகனங்கள் ஓடும் பெண்களுக்கு சற்றுக்கூடுதலாக ஏற்படும். உட்கார்ந்திருந்து நன்றாகச் சாப்பிடக்கூட நேரமில்லாத இந்த வேகமான உலகத்தில் எல்லாமே வேகம்தான். இதில் வாகனங்களில் ஓடுவதில் கேட்கவாவேண்டும்.

ஓயாமல் அங்கங்கே அடிக்கடி ஏற்படும் போக்குவரத்து நெரிசலை எண்ணிப்பாருங்கள். பக்கத்தில் வேகமாக வரும் வாகனங்களைப் பார்க்கும்போதே சாதாரண வேகத்தில் வானங்களை ஓட்டுபவர்களுக்குகூட டென்ஷன், பயம் இரண்டுமே ஏற்படத்தானே செய்யும். ஒரு பத்து நிமிடங்கள் முன்னதாகவே வெளியில் சென்றால் சாதாரண வேகத்தில் சரியான நேரத்துக்குச் சென்றுவிட முடியாதா?

இப்படி டென்ஷனுடன் வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படுவதுதான் தசைப்பிடிப்பு. இந்தப் பாதிப்பினால் ஏற்படும் வலியால் மீளமுடியாமல் இருக்கும். இதற்கு ஆயுள்வேத முறையில் சிகிச்சைகள் உண்டு. அதாவது, நம் உடலில் உள்ள முக்கியமான வர்மப் புள்ளிகளில் ஏற்படும், தசைப்பிடிப்பு மற்றும் கடினத்தன்மைக்கு அந்தக் குறிப்பிட்ட வர்மப்புள்ளிகளில் பாதிக்கப்பட்டவரின் தேவைக்கேற்றபடி மசாஜ் செய்வதால் அந்தப் புள்ளியில் உள்ள சக்தி எல்லாத் தசைநார்களுக்கும் சமமாகக் கிடைக்கும். உடலும் புத்துணர்வு பெறும்.

(தொடரும்...)

# இந்த வார பலன்கள்
## 09.04.2004- 15.04.2004 (திருக்கணிதம்)

| சூ. | புத. ராகு | செவ் சுக் | சனி |
|---|---|---|---|
| யுரே | 10 பக. 9-24 தனு-சந்<br>12 பக. 12-04 மக-சந்<br>13 மா. 6-32 மே-சந்<br>14 மா. 6-28 கும்-சந் | | |
| நெப் | | | குரு |
| | சந் | கேது | |

### மேடம
*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் நற்பலன்கள் உண்டு. குடும்பத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் நிலவும். கணவன் மனைவியிடையே அன்னியோன்னிய உறவு திருப்தியாக அமையும். பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடக்க இடமுண்டு. குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். திருமணப பேச்சுக்கள் விரைவில் நிறைவுபெறும். வெளிநாட்டுப் பிரயாணத்தை மேற்கொள்ள நினைப்பவர்களுக்கும் நற்பலன்கள் கிட்டும். வேலைபார்ப்போர் உற்சாகத்ததுடன் பணியாற்றி நன்மதிப்பைப் பெறுவர். தனித்தொழில் செய்பவர்களுக்கு இலாபம் உண்டு. வியாபாரத் தொழில் சிறப்பாக நடந்து நல்ல வருவாய் கிடைக்கும். மாணவர்களுக்கு வெளிநாட்டுக் கல்வி கிடைக்கப் பலனுண்டு.

### இடபம்
*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியினருக்கு பல சிறப்புக்கள் ஏற்படலாம். குடும்பஸ்தர்களுக்கு இல்வாழ்வு சந்தோசமாக இருக்கும். பெரியோர்களால் உதவி கிட்டும். செய்தொழில் சிறப்பாக அமைவதனால் பொருளாதார வளம் படிப்படியாக உயரும். தேகாரோக்கியம், குடும்பநலன் என்பன நன்றாக அமையும். நினைத்த கருமங்கள் அலைக்கழிவில்லாமல் நிறைவுபெறும். திருமணப் பேச்சுக்கள் சற்றுத் தாமதத்தின் பின்னர் கைகூடும். உத்தியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். வசதியான இடமாற்றங்களும் கிடைக்கலாம். வியாபாரத்தொழில் சிறப்பாக நடக்கும். பழைய நிலுவைகள் அறவிடக்கூடிய நிலை உருவாகும். புதிய முதலீடுகள் சற்றுப்பொறுத்துச் செய்வது நலம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமும், மதிப்புமுண்டு.

### மிதுனம்
*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களுக்கு நற்பலன்கள் குறைவாகவே காணப்படுகின்றன. குடும்பஸ்தர்களுக்கு வீட்டில் கருத்துவேறுபாடுகளும், ஒற்றுமைக்குறைவும் காணப்படும். மனைவி மக்களால் தொல்லைகள் ஏற்பட்டு, மனவேதனையைக் கொடுக்கும். ஆலய வழிபாடுகள் மனச்சாந்தியைத் தரும். நாளாந்தச் செலவுகள் வருவாய்க்கு மிஞ்சிப்போகும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டும். திருமணப் பேச்சுக்கள் காலவரையறையின்றித் தள்ளிப்போகும். வேலைபார்ப்பவர்களுக்கு நிம்மதியின்மையும், வேலைப்பளுவும் அதிகரிக்கும். வேலைமாற்றங்களும் ஏற்படலாம். வியாபாரம் மந்தமாகவே இருக்கும். எனினும் அழகுசாதனப் பொருட்கள் விற்பனை செய்வோர் லாபமடைவர். மாணவர்களுக்கு பெறுபேறுகள் திருப்தியளிக்காது.

### கடகம்
*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்கு மனநிம்மதி குறைந்து காணப்படும். தொழிலுக்கேற்ற வருவாய் கிடையாது. குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் தோன்றும். வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தமுடியாமல் இருக்கும். தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். இனபந்துக்களிடையே மனக்கசப்புகள் ஏற்படலாம். குடும்பப் பெண்களுக்கு மன அழுத்தம் அதிகரிக்கும். விவாகப் பேச்சுக்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். புதிதாகத் தொழில் வாய்ப்பை நாடுபவர்களுக்கு கருமம் கைகூடாது. பல பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும். வியாபார வளர்ச்சி குன்றும். முதலீடுகள் விற்பனையாகமல் தேங்கிக் கிடக்கும். பங்குவியாபாரம் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். மாணவர்களின் கல்வியில் மந்தநிலை காட்டுகிறது.

### சிங்கம்
*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பொதுவாக நன்று. குடும்பஸ்தர்களுக்கு மகிழ்ச்சி நிலவும். இனசனங்களாலும், சகோதரங்களாலும் உதவிகள் உண்டு. தொழிலுக்கேற்ப வருவாய் கிட்டும். தொடங்கும் கருமங்கள் விரைவில் வெற்றியைத் தரும். தேகசுகம் அதிகம் பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் மனத்திருப்தியுடன் காணப்படுவர். திருமணப் பேச்சுக்கள் ஓரளவு நிம்மதியைத் தரும். வெளிநாட்டுப் பிரயாணங்களும் கைகூட இடமுண்டு. வேலைபார்ப்பவர்கள் பல நன்மைகளையும், அதிகாரிகளின் பாராட்டுக்களையும் பெறுவர். வசதியான இடமாற்றங்கள் கிடைக்கலாம். வியாபாரத்துறையில் அதிகம் பாதிப்பு இல்லையாயினும. லாபம் போதாமல் இருக்கும். பங்கு வியாபாரம் கஷ்டத்தைக் கொடுக்கும். மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி உண்டு.

### கன்னி
(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)



கன்னி ராசிகாரர்களுக்கு தொழில் பிரயாசை கூடுதலாக இருககும். செலவுகளுக்கும் குறைவில்லை. குடும்பத்தில் வீண் சச்சரவுகள், வாக்குவாதங்கள் ஏற்படும். கருத்து வேறுபாடுகள் தவிர்க்க முடியாமலிருக்கும். எடுத்த காரியங்களில் தடை தாமதங்கள் காட்டும். பணவருவாய் இருப்பினும் செலவுகளைச் சமாளிக்க முடியாது. தேகசுகமும் இடையிடையே பாதிக்கப்படலாம். குடும்பப் பெண்கள் விரக்தியடைந்து காணப்படுவர். திருமண முயற்சிகள் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகப் பெண்கள் தமது பொறுப்புக்களைச் சமாளிப்பதில் கஷ்டமுறுவர். வியாபாரத்துறை வளர்ச்சி குன்றிக் காணப்படும். கூட்டுறவு வியாபாரங்களில் பிரச்சினைகள் தோன்றும் . மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவாகவே காணப்படும்.

### துலாம்
*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலா இராசியினருக்கு இவ்வாரம் நற்பலன்கள் குறைாக இருப்பனும் பாதிப்புகள் இல்லை. குடும்பநிலை நன்று. இனசனங்களாலும், பிள்ளைகளாலும் நற்பலன்கள் உண்டு. தொடங்கும் கருமங்கள் தாமதமின்றி அனுகூலமாகும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்பட்டாலும் தாக்கங்கள் இராது. பணவருவாய் செலவுக்கு ஏற்றதாக அமையும். குடும்பப் பெண்கள் மனத்திருப்தியுடன் காணப்படுவர். தொழில்புரிவோர் உயர்ச்சியும், முன்னேற்றமும் பெறுவர். சக தொழிலாளர்களின் ஒத்துழைப்பு உண்டு. திருமணப் பேச்சுக்கள் விரைவில் கைகூடும். சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்பு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக அமையும். லாபமுண்டு. மாணவர்கள் முன்னேற்றம் பெறுவர்.

### விருச்சிகம்
*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிக இராசிக்காரருக்கு குடும்பசுகம் குறைவாகவே இருக்கும். மனைவி, மக்களால் பிரச்சினைகள் உருவாகலாம். வேலைக்கேற்ப இலாபம் கிடையாது. எதிர்பாராத திடீர் பணச்செலவு. நண்பர்கள் கூட எதிரிகளாக மாறுவர். எல்லாக் கருமங்களிலும் அவதானம் தேவை. குடும்பப்பெண்கள் பல கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும். உத்தியோகத்தர்களுக்கு கந்தோர் பிரச்சினைகள் தோன்றலாம். வேலைப்பளுவும் அதிகமாகும். திருமண முயற்சிகள் தள்ளிப்போகும். வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்ள விரும்புவோர் ஏமாற்றப்படுவர். வர்த்தகர்க்கு வியாபாரம் கட்டையாகவே இருக்கும். வங்கி உதவிகள் கிடைப்பது கஷ்டம். புதிய முதலீடுகளை தவிர்த்தல் நன்று. மாணவர்கள் கல்வியில் அக்கறை குறைந்து காணப்படுவர்.

### தனுசு
*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசியினருக்கு குடும்ப நிலை நன்றாக இருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே நல்லிணக்கமும், புரிந்துணர்வும் தென்படும். புத்திரர்களால் பெருமை சேரும். தொழில் சிறப்பாக நடக்கும். பணவருவாய் தேவைக்கேற்ப திருப்தியாகக் கிடைக்கும். தேகசுகம் பாதிப்படையாது. உற்சாகத்துடன் தொழிலாற்றக் கூடியதாக இருக்கும். குடும்பப்பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். உத்தியோகத்தர்களுக்கு பணியாற்றுவதில் நன்மதிப்பும், பாராட்டுக்களும் கிட்டும். திருமண முயற்சிகள் கைகூடும். சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்பு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். ஏற்றுமதி, இறக்குமதி செய்வோர் நல்ல லாபமடைவர். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பான முன்னேற்றம் காணப்படுகிறது.

### மகரம்
*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு அட்டமத்து வியாழன் நற்பலன்களைக் குறைக்கும். குடும்பத்தில் கருத்து வேற்றுமை அதிகரிக்கும். இதனால் நிம்மதிக் குறைவும் மனவேதனைகளும் ஏற்படும். தொழில் முயற்சிகளுக்கு ஏற்ற வருவாய் கிடையாது. அன்றாடச் செலவுகள் வரவுக்கு மிஞ்சிக் காணப்படும். இதனால் கடன் தொல்லைகள் ஏற்படும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். பெண்களுக்கு விவாக விஷயத்தில் முன்னேற்றமில்லை. குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தொழில் புரிவோர் தமது குடும்பப் பொறுப்புக்களைச் சமாளிப்பதில் கஷ்டமடைவர். உயரதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாக வேண்டியிருக்கும். வியாபார நடவடிக்கைகளில் சிக்கல்கள் தோன்றும். வங்கி உதவிகள் கிடையாது. ஊழியர்களின் பிணக்குகள் தோன்றும். மாணவர்களுக்கு முன்னேற்றம் குறைவு.

### கும்பம்
*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்ப ராசியினருக்கு நன்மை, தீமை கலந்த பலன்கள் காட்டும். குடும்பஸ்தர்களுக்கு மனநிம்மதி ஏற்பட்டாலும் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். செய்தொழில் நன்றாக இருப்பினும் வருவாய் குறைவு. கடன்தொல்லைகள் தலை தூக்க இடமுண்டு. தேகாரோக்கியம் குன்றுவதால் வைத்தியச் செலவு அதிகரிக்கும். திருமணப் பேச்சுக்கள் சுமுகமாக இருந்தாலும் விவாகம் கைகூடுவதில் தாமதம் காணும். வெளிநாட்டுப் பிரயாணத்தில் ஈடுபட்டவர்களுக்கு இழுபறிநிலை காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாயினும் சாமர்த்தியமாக நிறைவேற்றிவிடுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக நடந்தாலும், பணம் சேருவது குறைவு. கடன் வியாபாரத்தை தவிர்த்துக் கொள்ளுதல் நன்று. மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப முன்னேற்றமுண்டு.

### மீனம்
*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



இவர்களுக்கு குடும்ப உறவுகள் சுமுகமாக இருப்பினும், செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். பொறுமையுடன் கருமங்களை ஆற்றுவது நன்று. வெளிநாட்டிலிருந்து நற்செய்தி கிடைக்கும். தேகசுகம் சிறுபாதிப்புக்களைக் கொடுக்கும். வரவுக்கேற்ப செலவு செய்யப் பழகவேண்டும். குடும்பப்பெண்கள் நிம்மதி குறைந்து காணப்படுவர். விவாகம் சம்பந்தமான பேச்சுக்கள் முன்னேற்றமளிக்காது. உத்தியோகத்தர்கள் வேலைத்தளங்களில் அவதானமாக இருக்கவேண்டும். வீண்பழி வரப்பார்க்கும். உயரதிகாரிகளுக்கேற்ப நடந்துகொள்வது நன்று. வியாபாரிகளுக்கு மந்தநிலையே காட்டும். முயற்சிக்கேற்ப வருமானமுண்டு. மாணவர்களுக்கு ஊக்கம் தேவை. கலைத்துறையினர் கூடிய சித்திபெறுவர். ✦

---

**செய்திக் கட்டுரை** — ஆதி

# யாழ் மண்ணின் அலங்கோலம் மாறி அழகு திரும்புமா?



இலங்கைத்தீவு அழகானது. அதிலும், யாழ்ப்பாணம் என்பது தனியழகு கொண்டது என்பது வெளிப்படை. அத்தகைய அழகிற்கு புவியியல் மட்டுமன்றி, யாழ்.மண்ணின் வளமும், மக்களின் பண்பாடு, கலாசாரம், சமயம், ஒழுக்கம் என்பனவும் காரணமாகும்.

யாழ்.மண்ணின் அழகு போரினாலும், போரின் பக்கவிளைவுகளாலும் சிதைந்து சின்னாபின்



னப்பட்டுப்போயுள்ளது. தற்காலிக அமைதி நிலவிய காலங்களிலும், சிதைவுகளைச் சீர்செய்யும் பணிகளுக்கும், யாழ். மண்ணை அழகுபடுத்தும் பணிகளுக்கும் யாரும் அக்கறை காடடியதாக இல்லை. தவறுகளுக்குக் காரணம் காட்டும் அதிகாரிகளும், தட்டிக்கழிக்கும் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளையும், இனி மேலும் தொடர அனுமதிக்கமுடியாது.

யாழ்.நகரப் பகுதியில் குப்பை கூழங்கள் கொட்டுவதற்கான இடங்களுக்குத் தட்டுப்பாடே கிடையாது. எல்லா மூலை முடக்குகளிலும் குப்பைகூழங்கள் தேங்கியுள்ளன. நகரில் மட்டுமன்றி, புறநகர்ப்பகுதிகளிலும் இத்தகைய குப்பைகூழங்களால் துர்நாற்றம் வீசுகின்றன. நகரசபைகளும், பிரதேச சபைகளும் இந்த நிலைமைக்குப் பல்வேறு பிரச்சினைகளையும், வசதியீனங்களையும் காரணங்காட்டி வருகின்றன. அப்படிப்பார்க்கின்றபோது, யாழ்ப்பாணத்தில் உள்ள இத்தகைய சபைகள் எதற்காக உள்ளன என்று மக்கள் கேட்கும் அளவிலேயே உள்ளன.

வலி.மேற்கில் உள்ள நகரசபை சுத்திகரிப்பாளர் (காளிமுத்து) கருத்துக் கூறுகையில் - 'நாங்கள் சங்கானை நகர்ப்பகுதியில் உள்ள குப்பைகூழங்களை தள்ளுவண்டியில் சேர்த்து, மொத்தமாக 10 கிலோமீற்றர் தூரம் சென்று, கொட்டிவிட்டுத் திரும்பிவரவேண்டியுள்ளது. ஐந்து ஊழியர்கள் இதில் ஈடுபடுகிறோம். நாங்கள் குப்பைகூழம் அள்ளும் நேரம் கொஞ்சம் தான். போக்குவரத்தில்தான் எங்கள் நேரம் போகிறது. இதனால், எங்கள் தேவையை சீராகச் செய்யமுடியாதுள்ளது. இதுவரை காலமும் எங்களுக்கு எந்த வசதிகளும் வழங்கப்படவில்லை. "லான் மாஸரர்" ஒன்று தருவதாக, கடந்த ஐந்து வருடங்களாகக் கூறப்பட்டு வருகிறது.

எந்தவொரு சுத்திகரிப்பாளர்களுக்கும் சப்பாத்துக்களோ அல்லது சுத்திகரிப்பாளர்களுக்கான அங்கிகளோ தரப்படுவதில்லை. வேறு இடங்களில் உள்ள (கொழும்பு) சுத்திகரிப்பாளர்களுக்கு எவ்வளவோ வசதிகள் வழங்கப்படுகின்றன என்று கூறிய காளிமுத்து - எமது சுத்திகரிப்பாளர்களுக்கு அரசினால் கிடைக்க வேண்டிய எந்த வசதிகளும் கிடைப்பதில்லை என்றார்.

கொழும்பு போன்ற நகரங்கள் எவ்வளவு அழகுபடுத்தப்பட்டுள்ளன. பூமரங்களும், நிழல் மரங்களும், நடைபாதைகளுமாகக் காட்சி தருகின்றன. ஆனால், எமது பிரதேசத்தில் உள்ள பஸ்தரிப்பு நிலையங்களின் கதியோ கவலைக்கிடமாக உள்ளன. போரையும், பிரச்சினைகளையும் காரணம் காட்டுவதை நிறுத்திவிட்டு, எமது தேசத்தின் அலங்கோலங்களை அகற்றி அழகுபடுத்தும் பணியில் உரியவர்கள் ஈடுபட வேண்டும். நகர சுத்திகரிப்பாளர்களுக்குரிய பிரச்சினைகளை அடையாளங்கண்டு, அவர்கள் தமது கடமையினைச் சரிவரச் செய்வதற்குத் தடையாகவுள்ள காரணங்களை மாற்றியமைத்து, அவர்கள் தமது பணிகளைச் சரிவரச் செய்வதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும்.

சுத்திகரிப்பாளர்களின் பணி மிகவும் அவசியமான ஒன்று என்பதனைச் சகல தரப்பினரும் உணரவேண்டும். சமூகத்தில் அவர்களுக்குரிய இடத்தினை வழங்கி அவர்களின் சமூக, குடும்ப முன்னேற்றத்திற்கான வழிகளையும் ஏற்படுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத்தின் சூழல் அழகு - அதலபாதாளத்தை நோக்கிச் செல்வது, பண்பாடு, எமது இனம் என்பனவற்றையும், குறைவான அந்தஸ்தினையும் எதிர்காலத்தில் ஏற்படுத்தும் என்பதனை எமது தேசத்தில் அக்கறையுள்ள சகல தரப்பினரும் உணர்ந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

திருக்குறள்

# நமது நோக்கு

## புதிய அரசின் செயற்பாடுகள் ஏற்படுத்திவரும் சந்தேகங்கள்

புதிய அரசின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளே இலங்கையில் சமாதானத்தின் எதிர்காலம் குறித்த நம்பிக்கைகளை கேள்விக்குறியாக மாற்றத் தொடங்கியுள்ளன.

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பதவியேற்றதுமே, சமாதான முயற்சிகளில் இந்தியாவின் தலையீடு அவசியம் என அறிவித்துள்ள அதேவேளை - அவரது கருத்தை ஆமோதித்துள்ள லக்ஸ்மன் கதிர்காமர் அதைவிட ஒருபடி மேலேபோய் நோர்வே சமாதான முயற்சிகளில் ஏற்பாட்டாளராக மட்டுமே இருக்கலாமேயன்றி, மத்தியஸ்தராகவோ, தீர்ப்பு வழங்கும் அதிகாரம் கொண்ட ஒருவராகவோ செயற்பட முடியாது என்று அதிகாரத் தொனியுடன் சற்று அதிகப்பிரசங்கித்தனமாகவே தனது கருத்தினை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதம பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினரின் உறுப்பினர்களில் ஒருவரான சந்திரசேகரன் என்பவர் சமாதானப் பேச்சுக்கள் தொடரும் அதேவேளை, விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்க முடியாதெனவும், எல்லாக் கட்சிகளுடனும்தான் பேச்சுக்களை நடத்தப்போவதாகவும் தேர்தல் முடிவுகள் முழுமையாக வெளியாகும் முன்னரே அறிக்கை விட்டிருந்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையொன்றின்போது, விடுதலைப் புலிகளுடன் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று கூறினாலும், அது எந்த அடிப்படையில் தொடங்கும் என்று கோடி காட்டவில்லை.

சமாதானப் பேச்சுக்களுக்கு முற்றிலும் எதிரான ஹெல உறுமயவினருடன், அரசின் ஸ்திரத்தன்மையைப் பேண ஆதரவைக்கோரிப் பேச்சுக்களை மேற்கொண்டுவரும் ஐ.ம.சு.முன்னணியினர் அவர்களின் பல நிபந்தனைகளுக்கும், கோரிக்கைகளுக்கும் சம்மதமளிக்க வேண்டியநிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மறுபுறம் இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம், படைகளுக்கு மேலும் ஆட்திரட்டல், படைகளை நவீனமயப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளிலும் புதிய அரசு முழுமையாகத் தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கமுன்னரே தீவிரம் காட்ட முனைந்து வருவதை செய்திகள் உறுதிசெய்கின்றன.

இதேவேளை - மட்டக்களப்பில் கருணா கும்பலினால் எழுந்துள்ள நெருக்கடிகளைப் பயன்படுத்தி பிரதேசவாத்தை தூண்டி சுவாலை விட்டெரிய வைப்பதன்மூலம் தமிழ்த் தேசியத்தை - அதன் இறுக்கமான கட்டமைப்பை அதன் வலுமிக்க தலைமைத்துவத்தை சிதைக்கவைக்கும் முயற்சியிலும அரசு ஈடுபடுவது வெளிப்படையான விடயமாகிவிட்டது.

கருணாவை, என்றுமில்லாதவாறு இராணுவத் தளபதியும், ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவருமான லெப். ஜெனரல் பலகல்ல வானளாவப் புகழ்ந்து பாராட்டியுள்ளமையை கருத்தில்கொண்டு பார்த்தால் இது தெளிவாக விளங்கும்.

குழம்பிய குட்டையை மேலும் குழப்பி அதில் ஆதாயம் பெற நினைக்கும் மூன்றாந்தர அரசியல்தனம் இதுவாகும். இந்த நடவடிக்கையும் சமாதான முயற்சிகளுக்கு குந்தகத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை எல்லாவற்றிற்கும் மேலாக நேற்று முன்தினம் நடைபெற்றுள்ள சம்பவமானது அரசினதும், - ஜனாதிபதியினதும் அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள படைத்தரப்பினரதும் அமைதி விரோத செயற்பாடுகளுக்கு சிறந்த உதாரணமாகவும் அவர்களின் மீதான நம்பிக்கையை முற்றாக இழக்கவைப்பதாகவும் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலிருந்து தமிழரசுக் கட்சியின் சார்பில் தெரிவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஐந்து உறுப்பினர்களும் கொழும்பில் நடைபெற்ற கூட்டத் தில் கலந்துகொள்ள வந்தபோது கூட்டமுடிவில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக பலவந்தமாக ஐவரும் இராணுவத்தினரின் அனுசரனையுடன் கருணா கும்பலால் கூட்டிச்செல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பில் அதுவும் இராணுவப் பாதுகாப்புடன் நின்றிருந்தவர்களை கருணா கும்பலின் உத்தரவின்பேரில் பாதுகாப்புக்கு வந்த இராணுவத்தினரே கூட்டிச்சென்றனர் என்பது (கடத்திச் சென்றனர் என்று கூறுவதே பொருத்தமானது) பல்வேறு சந்தேகங்களை எழுப்புவதாக உள்ளது.

அரசின் அனுமதியோ உத்தரவோ இன்றிப் படைத்தரப்பினர் இந்தச் செயலில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள் என்பது தெளிவான விடயம்.

லயனல் பலகல்லேயின் கருணா தொடர்பான பாராட்டை இந்தச் சம்பவத்துடன் பொருத்திப் பார்த்தால் பொருத்தமானதாகும்.

எனவே நடைபெறும் சம்பவங்களையும், அரசுத்தரப்பைச் சேர்ந்தவர்களின் கர்வமிக்க அறிக்கைகளையும் பார்க்கும்போது அரசு மீண்டும் ஒரு போரை ஆரம்பிப்பதற்கான 'சீண்டல்' நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டதென்ற உணர்வு ஏற்படுவதென்பது தவிர்க்கமுடியாததாகியுள்ளது.

பலவீனமான ஒரு அரசு - தமிழ்மக்களைப் பலவீனமாக்குவதன்மூலம் தன் பலவீனத்தை மறைத்து பலமானதாகக் காட்ட முயற்சிக்கிறது என்பதை சமாதானத்தின்பால் நம்பிக்கை கொண்ட தமிழ்மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

அவர்களின் பட்டறிவு அனுபவமானது பேரினவாத அரசுகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பது அவர்களின் மனதில் ஆழப்பதிந்தே உள்ளது.

# நாடும் நடப்பும்




செய்தி :- இலங்கையில் ஜாதிக ஹெல உறுமய பௌத்த தர்மராச்சியம் அமைக்கப்படும் என்று கூறுகின்றது.

# புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் அழுத்தமே காரணம்!

## முன்னாள் பிரதமரின் நெருங்கிய வட்டாரம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டதன் பின்னணியில் இந்தியாவே இருப்பதாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் புதிய பிரதமராக தெரிவு செய்யப் படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தபோதும், இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே பிரதமர் பதவிக்கான வாய்ப்பு மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டதாக இந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தநிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதன் பின்னணியில் இந்தியா இருப்பதாக ஊடகங்களில் வெளியாகிய செய்திகளை இந்தியத்தூதுவர் நிரூபம்சென் முற்றாக மறுத்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடவேண்டிய அவசியம் இல்லையெனத்தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது, இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடனும் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுமெனவும் நிரூபம்சென் நம்பிக்கை தெரிவித்ததார்.

# நான்கு மாகாண முதலமைச்சர்கள் தேர்தலில் தோல்வி கண்டனர்!

(கொழும்பு)

13 ஆவது நாடாளுமன்றத்திற்காக நடத்தப்பட்ட தேர்தலில் போட்டியிட்ட ஐந்து மாகாண முதலமைச்சர்களில் நால்வர் தோல்வியடைந்தனர்.

நடந்து முடிந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களில் ஐவர் அந்தக் கட்சியின் சார்பில் மாகாண முதலமைச்சர் களாகப் பதவிவகித்து வந்தனர்.

இந்த தேர்தலில் அதிகூடிய ஆசனங்களை பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றாலும், இந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட ஒரேயொரு முதலமைச்சர் மட்டுமே வெற்றிபெற்றார்.

களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் குரே மட்டுமே வெற்றி பெற்றுள்ளார்.

சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மொகான் எல்லா வெல, ஊவாமாகாண முதலமைச்சர் ஏ.எம்.புத்ததாஸ, வடமேல் மாகாண முதலமைச்சர் அத்துல விஜேசிங்க மற்றும் தென்மாகாண முதலமைச்சர் ஏ.எச்.ஜி.சிறிசேன ஆகியோரே இந்தத் தேர்தலில் தோல்வி கண்டவர்களாவர்.

# போரினால் கணவனை இழந்த குடும்பங்களுக்கு சுயதொழில் கடன்

(யாழ்ப்பாணம்)

போரினால் கணவனை இழந்த குடும்பத்தலைவிகளுக்கான சுயதொழில் கடன் வழங்கும் வைபவம் நேற்று யாழ்ப்பாணம் கோவில் வீதி 18 ஆம் இலக்கத்தில் உள்ள குடும்பப் புனர்வாழ்வு நிலையத்தில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் மனித நேயஅமைப்புக்கள் ஒன்றிய நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜீவன் தியாகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான அறங்காவலர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, அறிவொளி நிலையப்பணிப்பாளர் வண.ச.இராசநாயகம் அடிகளார், அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் ப.ஸ்ரீசக்திவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்வில் கணவனை இழந்த பெண்கள் 25 பேருக்கு ரூபா 8000 ஊம் வழங்கப்பட்டது.

திருமதி நந்தகுமாரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன. வேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொணடனர்.

இந்நிகழ்வில் கணவனை இழந்த பெண்கள் 25 பேருக்கு ரூபா 8000 ஊம் வழங்கப்பட்டது.

திருமதி நந்தகுமாரின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

(செ)

# உடுவில் கமநலசேவை நிலையத்தில் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம்

(உடுவில்)

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தின் கட்டிடத் தொகுதியில் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

காலையில் 6 மணிமுதல் மாலை 6 மணிவரை திறந்திருக்கும் இந்த விற்பனை நிலையத்தில், விவசாயிகள் தமக்கு வேண்டிய கிருமிநாசிகள், உரங்கள், விதைகள், மண் வெட்டி, மருந்து தெளி கருவிகள், உழவு இயந்திரங்கள் என்பனவற்றை பெற்றுக்கொள்ள முடிவதுடன் விவசாய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(101)

# கூட்டமைப்பு எம்.பிக்களை சனியன்று தமிழ்ச்செல்வன் சந்திப்பார்

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நாளை சனிக்கிழமை சந்திக்கவுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளது அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது. தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று முன்தினம் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் மற்றும் மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோரையும் சந்தித்து பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

உளவியல்...

ஜெயா

# சமூகச் சூழலின் உளவியல் தாக்கங்களே வன்முறையின் வளர்ச்சிப்படிகள்

இன்றைய சமூகத்தில் காணப்படும் வன்முறைகளின் வளர்ச்சிக்கும் அதன் போக்கிற்கும் அடிப்படையாகச் சமூகச்சூழலில் ஏற்படும் உளவியல் தாக்கங்களைக் குறிப்பிடலாம். இந்தகைய உளவியல் தாக்கமானது நாட்டில் ஏற்பட்ட யுத்தசூழ்நிலையுடன் ஓர் வலைப்பின்னல் அமைப்பினைக்கொண்டுள்ளது எனலாம். இத்தகைய வலைப்பின்னலூடாக சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு மனித மனத்தோடு தொடர்புடைய 'மனஎழுச்சி' முக்கியபங்கினை வகிக்கின்றது.

இங்கு மன எழுச்சியானது மனிதனின் பிறப்போடு தொடர்புபட்ட உள உந்தலாகக் கருதப்படுகின்றது. ஆயினும், மனிதனின் ஏனைய உணர்ச்சிகளிலிருந்து வேறுபட்டதாகவும், மிக நெருங்கிய தொடர்புகொண்டதாகவும் காணப்படும்.

இவற்றினைக் கருத்தில்கொண்டு யுத்த



அழுத்தங்களுக்கு உட்பட்ட தமிழர் சமூகத்தின் உளவியல் தாக்கங்களை எடுத்து நோக்குகையில் - இவற்றை பின்வரும் பகுதிக் கட்டமைப்பில் உள்ளடக்கலாம்.

**1. யாழ். தமிழ்ச்சமூகம் -** (Community of Jaffna Tamil)

**2. வன்னித்தமிழ்ச்சமூகம் -** (Community of Vanni Tamil)

**3. கொழும்புத் தமிழ்ச்சமூகம் -** (Community of Colombo Tamil)

**4. புலம்பெயர் தமிழ்ச்சமூகம் -** (Community of Emigrant Tamil)

இத்தகைய சமூக வகைப்பாடும் அதன் விளைவுகளும் யாழ்ப்பாண சமூகத்தில் தோன்றியுள்ள இன்றைய வன்முறைநிலைகளை அடிப்படையாகக்கொண்டும், அதன் பின்னணியிலுமே ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால், இது ஒரு பிரதேசம் சார் ஆய்வாக செல்வாக்குச் செலுத்துவதற்கு இடமுண்டு எனலாம்.

இங்கு, இத்தகைய சமூகச்சூழலானது, எந்தவகையில் உளவியல் தூண்டல்களை மேற்கொண்டு, அவை உளவியல் பிழிவான வன்முறைக்கு எவ்வாறு வித்திடுகின்றன என்பதோடு, அவற்றுக்கான கடந்தகால காரணகாரியத் தொடர்புகளைச் சீர்தூக்கிப்பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

### யாழ். தமிழ்ச் சமூகம்
### (Community of Jaffna Tamil)

யாழ்.சமூகத்தினை எடுத்து நோக்குகையில், இக்காலப்பகுதியில் ஓர் மும்முனைத் தாக்கத்திற்கு, நிலைதவறி வழிதெரியாது இளைஞர்குழாம் தடுமாறியமை - இன்றைய காலகட்ட சமூக சீரழிவினூடாகத் தெரியவருகின்றது.

இந்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட அரச படைகளின் ஆக்கிரமிப்பும், மிதவாதக் கட்சிகளின் அரசியல் சீட்டாட்டமும், விடுதலைப் போராட்டம் காரணமாக ஏற்பட்ட உணர்வுகளும் இணைந்து யாழ்ப்பாண சமூகத்தில் ஓர் மும்முனைத் தாக்கத்தினை உருவாக்கியதெனலாம்.

அமைப்புரீதியான கட்டுப்பாடுகளைக் கொண்டு செயற்பட்ட இளம் சமூகம் - திடீரெனத் தோற்றம்பெற்ற இத்தகைய மும்முனைத் தாக்குதலுக்கு வளைந்துகொடுக்கமுடியாது போகவே, இவர்கள் மத்தியில் புதியதொரு உளவியல் பிழிவான மன எழுச்சித் தோற்றம் பெற்றது எனலாம்.

இத்தகையதொருநிலையினைத் தகுந்த முறையில் பயன்படுத்திப் பயன்பெறுவதே நோக்கமாகக்கொண்டு, மிதவாதத் தமிழ்க்கட்சிகள் செயற்படத் தொடங்கின. இவை தமது குறுகிய அரசியல் இலாபத்தினை மட்டும் ஆதாயமாகக் கொண்டு, தமிழர் கலாசார மாண்பினை சந்தையில் ஏலமிட்டு, வேடிக்கை பார்க்கலாயினர்.

இதன் விளைவாக இன்றைவரையும் அடைபட்டு வெறுப்படைந்திருந்த ஒரு இளம் சமூகம்- அதன் சகல வழிகளும் திறக்கப்பட்டு, மேய்ப்பார்வையற்ற மந்தைபோல் விடப்பட்டதால், இதன் விளைவு என்னவாகுமோ என அச்சம் ஏற்படவே செய்கிறது. அதேபோன்றே யாழ்ப்பாணத்தில் இளம் சமூகத்தின் மன எழுச்சியும், புதுத்தோற்றம் கொண்டது.

இந்தக் காலப்பகுதியில் கொண்டுவந்து குவிக்கப்பட்ட கீழ்த்தர ரசனையினை ஊட்டக்கூடிய நீலப்படங்களும் ஏனைய சினிமாப் படங்களும், கப்பல், விமானப் போக்குவரத்தால் ஏற்பட்ட தென்பகுதி தொடர்புகளும், ஏ-9 பாதைத்திறப்பால் ஏற்பட்ட கட்டுப்பாடற்ற வர்த்தகமும், இதனூடான தென்பகுதி மக்களின் அதிகரித்த வருகையும் - யாழ்.இளம் சமூகத்தினை கதாநாயகர்களாக தோற்றம் கொள்ளவைத்தது எனலாம்.

இதன் பயனாக இப்பிரதேசத்தில் ஆட்கடத்தல், பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை என்பன உத்வேகம் பெறலானது. இத்தகைய உளவியல் பிழிவான வன்முறைகள் - தனது சமூகம் என்ற நிலையினைக் கடந்து காலப்போக்கில் விஸ்தாரம்கொள்ள தொடங்கியது.

இதன் விளைவாகவே படையினரால் ஏற்படும் விபத்துக்களின்போது, அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையில், வன்முறைச் சிதறல்கள் தோற்றம்பெற்று, பின் அவை படிப்படியாக வளர்ச்சிகண்டு, பொது விபத்துக்களிலும் வியாபித்திருந்ததை கடந்தகாலங்களில் காணமுடிகின்றது. இது எய்தவனை நோக்கி அம்பு பாயும் சூழலை உருவாக்கியுள்ளது.

இத்தகைய நிலைமையானது ஒரு ஜனநாயக நாட்டில் சட்டதிட்டங்களைக் கொண்டு வருவதன்மூலம், முழுமையாகக் கட்டுப்படுத்தமுடியாததாகும். ஏனெனில், இங்கு ஜனநாயகம் தனி மனிதனுக்குப் பல சுதந்திரங்களை அளித்துள்ளமையே ஆகும்.

### வன்னித் தமிழ்ச்சமூகம்
### (Community of Vanni Tamil)

வன்னிச் சமூகத்தினை எடுத்துக்கொண்டால் - இங்கு ஏற்பட்ட போர் அனர்த்தங்கள் இதற்காக ஏற்படுத்தப்பட்ட முன்னாயத்தங்கள், என்பவற்றால், இளைஞர்களின் மனங்கள் ஒரு விதமான உளவியல்ரீதியான எழுச்சிபெற்றது எனலாம். இவ் மன எழுச்சியானது, அச்சமூகத்தினரிடையே விரும்பியோ விரும்பாமலோ தேவையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும்.

தொடர் எறிகணைத் தாக்குதல், விமானக் குண்டுவீச்சு, தொடரும் வறுமை, திடீர் மரணங்கள், ஓர் குறுகிய நிலப்பரப்பில் கட்டுண்ட வாழ்க்கை, இதனூடான எதிர்காலம் பற்றிய ஏக்கம் என்பனவற்றால் மன இறுக்கம் ஏற்பட்டதா? என்பன ஒரு சமூகத்தினூடே மன எழுச்சிக்கான செல்வாக்குச் செலுத்தும் காரணிகளிலேயே தங்கியுள்ளது எனலாம்.

இங்கு இடம்பெயர்வு காரணமாக, கட்டுக்கோப்பான குடும்பமுறைகள் அகன்று, மண்டப (அகதிமுகாம்) வாழ்க்கைமுறை ஒன்று அறிமுகமாகியது. இதன்விளைவாக சாதி, சமய, வர்க்க வேறுபாடுகளில் ஓர் தளம்பல் போக்கு உருவாக்கப்பட்டதோடு, வாழ்வுமுறையில் அனைவரும் சமம் என்றநிலை தோற்றம் பெற்றது.

இதனால், இணைந்திருப்பதால் - ஓர் கூட்டு வாழ்க்கைமுறை ஒன்று வளர்ச்சிபெறத் தொடங்கியதோடு, இதனூடாக ஏற்பட்ட பாசம், பற்று என்பன பிரிவு, துயரம் என்பனவற்றின் மனம் சம்பந்தமான எழுச்சிநிலையில் செல்வாக்குச் செலுத்தியதோடு, இக்கூட்டு வாழ்க்கை புதிய பல சச்சரவுகளையும் தோற்றிவிட்டிருந்தன.

இதற்கு இப்பகுதியில் ஏற்பட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கான அரசின் தடை, விலைவாசி உயர்வு என் பனவற்றோடு, கூட்டு வாழ்க்கையால் உண்டான உறவு முறைப் பிறழ்வான வாழ்க்கைத் தொடர்புகள், மரணபயம் போன்றவை இவர்களிடையே ஒரு புதுவித தூண்டலை ஏற்படுத்தியதெனலாம்.

மேலும் இங்குள்ள மாணவர்களுக்கான வெளித் தொடர்புகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததோடு, புறச்சமூக விழுமியங்களைப் புரிய முடியாத சூழ்நிலை காணப்பட்டதோடு, காலப்போக்கில் தமது சுயபாதுகாப்பில் இளைஞர்கள் நவீன வசதிகளைப் புரிந்துகொள்ளலில் காணப்பட்ட தடையும், தொடர்பாடலில் உள்ள இடைவெளியும், விஞ்ஞானத் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் காணப்பட்ட பின்னடைவும், விடலைப்பருவத்தினருக்கான சிறந்த ஆலோசனை கிடைக்காமையும் - இவர்கள் தம்மைத் தாம் புரிந்துகொள்வதில் ஒரு தெளிவற்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இத்தகைய ஓர் சூழ்நிலையில் ஏற்பட்ட உளவியல் பிழிவான மன எழுச்சியானது பாரியதொரு கலாசார, சமூகச்சீரழிவுக்கே வித்திட்டிருக்கவேண்டும். ஆனால், வன்னியில் காணப்பட்ட உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்பின் ஒழுங்கமைப்பும், கட்டுப்பாடுகளும் ஒரு முகப்படுத்தப்பட்ட விடுதலை என்ற எண்ணக்கரு நோக்கி நகர்த்தப்பட்டதாலும், இத்தகைய பாரிய பின்விளைவுகளிலிருந்து தப்பிப் பிழைக்க முடிந்தது எனலாம்.

ஆனால், யாழ்ப்பாணச் சமூகத்தில பல்வேறு தாக்கங்கள் சமூகச்சூழலில் காணப்பட்டபோதும், அவை ஒன்றும் அந்தச் சூழலைக் கட்டுப்படுத்தும் திறன்மிக்க நிர்வாகக் கட்டமைப்பினைக்கொண்டிருக்கவில்லை. இதனால், இத்தகைய வன்முறைகள் பல மாற்று வழிகளினூடாக பல்வேறு சக்திகளால், ஊக்கப்படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்பட்டது. இதன் பின்விளைவே இன்றைய யாழ்ப்பாணத்தின் பரிமாணமாகும்.

### கொழும்புத்தமிழ்ச்சமூகம் -
### (Community of Colombo Tamil)

கொழும்புச் சமூகமானது வித்தியாசமான ஓர் புறச்சூழ்நிலையினைக் கொண்டுள்ளது எனலாம். இந்தச் சமூகத்தில் வசிப்பவர்களை பின்வரும் பகுதிகளாகக் காட்டலாம்.

1. வன்னியிலிருந்து போர் காரணமாக படைத்தரப்பால் வெளியேற்றப்பட்டவர்கள், அல்லது வெளியேறியவர்கள்.

2. யாழ்ப்பாண இராணுவச் சூழலில் வாழ முடியாதவர்கள் அல்லது யாழ்ப்பாண கலாசாரத்தில் வெறுப்படைந்தவர்கள்.

3. வெளிநாட்டு உதவியுடன் சொகுசு வாழ்க்கை அனுபவிப்போர் அல்லது வெளிநாட்டு மோகம் கொண்டோர்.

4. நிரந்தர கொழும்புத் தமிழ்வாசிகள் அல்லது வர்த்தகவாசிகள்.



5. இவை தவிர்ந்த ஏனையத் தமிழ்ச் சமூகங்கள்.

இத்தகைய சமூகமட்டங்கள் வடபகுதி நோக்கிப் படையெடுக்கின்றபோது, அதன் கலாசாரமோகங்களும், எமது தமிழ் சமூகங்களிடையே தொற்றிக்கொள்வதுடன், அவை இளம் சமூகங்களிடையே உளவியல் பிழிவான எழுச்சிக்கோலங்களையும் தோற்றுவித்துவிடுகின்றன. கொழும்பு சமூகமானது, பல்வேறு மொழி, கலாசாரங்களோடு பின்னிபிணைக்கப்பட்டுள்ளதாலும், சுய கட்டுப்பாடுகள் ஏதும் இல்லாமையினாலும், பண்பாட்டுக் கோலங்களில் பெரும் சீரழிவுநிலையே காணப்படுகின்றது. இதன் அனுபவப் பகிர்வினை இவர்களூடாக வடபகுதி இளம் சந்ததியினர் பெறமுயல்வதால், தாம் அப்படிப்பட்டதொரு சூழ்நிலையில் வளர்க்கப்படாமையை சித்தரிப்பதனூடாக உளநிலை சம்பந்தமான புதுவித எழுச்சித்தூண்டல் ஒன்று தோற்றம்பெற்று, அது உத்வேகம்பெற்று சமூகசீரழிவிற்கே வித்திடுகின்றது. இது பின் வன்முறை எனும் வடிவினைப் பெற்றுக்கொள்கின்றது எனலாம்.

இதன் விளைவாக தோன்றுபவையே பாலியல் வல்லுறவு, ஆட்கடத்தல், அடிதடி சண்டைகள், மது அருந்தல், நீலப்படம் பார்த்தல் என்பவையாகும்.

### புலம்பெயர் தமிழ்ச் சமூகம் -
### (Community Of Emigrant Tamil)

இவர்கள் வெளியூரில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் ஆவர். இவர்களில் சிலர் நாட்டுப்பற்று, மண், மொழி, கலாசாரம் என்பவற்றில் அக்கறையுள்ளவர்கள். ஆனால் பலர் விகற்பமான மனநிலை உடையவர்கள். இவர்கள் தம் நாட்டையோ, மொழியையோ கூறவெட்கப்படுவதோடு, தாம் கனேடியர், பிரித்தானியர்... எனக்கூறிக்கொள்வதில் பெருமைகொள்பவர்கள்.

இவர்களைவிட, மூன்றாவது வகையினரை எடுத்துக்கொண்டால் - இவர்கள் தம்தம் நாடுகளில் அடிப்படை மாதவாத சக்திகளின் பிடியில் அகப்பட்டு, தமது நாட்டின் மொழியையோ, பண்பாட்டினையோ மறந்து, தமிழ் அடையாளங்களைத் தொலைத்துவிட்டு திரியும் ஒருவகை உளநோயாளர்கள் எனலாம்.

இவர்களது தாயக வருகையானது, அந்நாட்டினது கலாசார செயற்கையினை எமது சமூகத்தினிடையே பரவலடைவதற்கு வழிகோலுகின்றது. இவர்கள் தமது உறவினர்களை சந்திக்கும்போது, மேற்கத்தைய கலாசார பாணிகளைக் கைக்கொள்வதால், இவை எமது சமூகத்தில் ஓர் எழுச்சிநிலையினை சமூகத்தில் தோற்றுவித்து விடுகிறது. இதன் பயனாகவே காதல் - காமம் எனும் இரண்டுக்கும் வேறுபாடு தெரியாத திருமணநிலைகளும், வெளியூர் திருமணத்தினால் ஏற்படும் உளநிலை முரண்பாடுகளும், பின் அவை விவாகரத்து எனும் நிலைக்கு வழிவகுக்கின்றன.

தமிழ் கலாசாரத்தில் பாரம்பரியமான பாண்பாட்டுக் கோலங்களும், சமூக ஒழுக்க நெறிமுறைகளும், மரபுவழி உறவுமுறைகளும்- இன்று வெளியூர் தொடர்பு மோகத்தால் அடிபட்டுப்போனதன் காரணமாக மேலைநாட்டுப் பாணியில் இன்று பல தமிழ் குடும்பங்கள் விவாகரத்துக்கோரி நீதிமன்றில் நிற்கும் பரிதாபத்தினைக் காணமுடிகின்றது.

இத்தகைய அனைத்து சமூக அமைப்புக்களும் யாழ். சூழலில் சங்கமித்து, யாழ். சமூகத்தினிடையே ஓர் காரணப்பிழிவினை ஏற்படுத்தியதெனலாம். இத்தகைய காரணப் பிழிவானது இன்று, நேற்று திடீரெனத் தோற்றம் பெற்றதொன்றல்ல. இது நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியினைக் கொண்டதாகும்.

இத்தகைய வரலாற்றுப்பின்னணியின் ஆரம்பக்கட்டமாகப் போராட்ட அமைப்புக்களின் தோற்றமும், அதன் நடைமுறை வளர்ச்சியும் அவற்றினிடையேயான முரண்பாடுகளும், மோதல்களும் எனும் ரீதியில் அமைவதால், இதனை பின்னோக்கிப் பார்ப்பது இன்றைய சூழ்நிலையில் ஓர் தர்மசங்கடமான ஒன்றாகும்.

மேலும், இன்றைய அரச வன்முறைகள் மற்றும் இனவாத தமிழ் குழுக்களின் திட்டமிட்ட செயற்பாடுகள் என்பனவும் சமூகச்சூழலில் உளவியல் தாக்கங்களை உண்டுபண்ணுகின்றன. இவை, பின் வன்முறைகளின் தோற்றத்துக்கான வளர்ச்சிப்படிகளாக மாற்றமுறுகின்றது.

எனவே, இவ்வாறு உளவியல் பிழிவான நடவடிக்கைகளால் சிதைவுறும் எமது சமூகத்தினை, சிறந்தமுறையில் வழிநடத்தப் பின்வரும் பகுதிகள் ஊடாக செயற்திட்டங்களை நகர்த்தல் வேண்டும்.

1. சிறந்த உள ஆற்றுப்படுத்தல் நிலையங்களால் உடற்பயிற்சிக்கூடங்கள், தியான மண்டபங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் என்பன தொழிற்படல்வேண்டும்.

2. சிறந்த நண்பர்களாக தாய், தந்தை என்போருடன் ஆசிரியர்கள், மதகுருமார் என்போர் காணப்படுதல் சிறந்ததாகும்.

3. விடலைப்பருவ ஆலோசனைகளையும், கருத்தூட்டல் செயற்பாடுகளையும் கிராமந்தோறும் விஸ்தரித்தல் வேண்டும்.

4. குடும்ப வாழ்வுமுறைக்கு தேவையான அறிக்கை நிலைக்கல்வியினை (அன்பு - பொருளாதாரம் ) குடும்ப அறிவியலாக ஊட்டுதல்.

5, கல்விக்கொள்கையில் தேவையான - காத்திரமான மாற்றம் கொண்டுவருதல் மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

இத்தகைய செயற்திட்டங்களை சீராக செயற்படுத்துவதனூடாக வன்முறைப்பிழிவுகளிலிருந்து இளம் சந்ததியினரை 'மீள மீளாக்கம்' செய்யமுடியும் என்பது தெளிவு.

# அனுபவமுள்ள அமெரிக்கப் படையினரை ஈராக்கில் பணியில் ஈடுபடுத்த திட்டம்

## அமெரிக்க பாதுகாப்பு செயலர் கூறுகிறார்



ஈராக்கில் அமெரிக்கப்படைகளுக்கெதிராக அதிகரித்துவரும் தாக்குதல்களை கட்டுப்படுத்துவதற்கு அனுபவமுள்ள படையினரை நீண்ட காலம் கடமையில் ஈடுபடுத்துவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக அமெரிக்காவின் பாதுகாப்பு செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

அநேகமான தாக்குதல்கள் வன்முறைக் கும்பல்களினாலும், பயங்கரவாதிகளினாலும் நடத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்மைக் காலத்தில் நடைபெறும் தாக்குதல்கள் பாக்தாத்தின் வடக்கு - மேற்குப் பகுதிகளில் சனி, ஷியா பயங்கரவாதிகளினால் நடத்தப்படுகின்றன.

பலூஜாவில் அமைந்துள்ள சனி முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் அமெரிக்கப் படையினரின் போர் நடவடிக்கைகள் தொடர்கின்றன. பள்ளிவாசல் ஒன்று அமைந்துள்ள பகுதியில் குண்டுத் தாக்குதலை படையினர் மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் 40 இற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டதாக தெரிவித்தனர். ஆனால், பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை எனவும், கூட்டுப் படைக்கு எதிராக போரிட்ட ஒருவர் மாத்திரமே கொல்லப்பட்டதாகவும், அமெரிக்கப்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை, பல நாட்களாக தொடரும் இந்தத் தாக்குதலில் 100 இற்கும் மேற்பட்ட ஈராக்கிய மக்களும், 30 வரையான கூட்டுப் படையினரும் கொல்லப்பட்டிருந்தனர். தலைநகர் பாக்தாத்தை அமெரிக்கப்படையினர் கைப்பற்றிய பின்னர் அமெரிக்கப்படையினருக்கு ஒரே நேரத்தில் ஏற்பட்டுள்ள மிகக் கூடுதலான இழப்பு இது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஷியா முஸ்லிம்களின் எதிர்ப்பினை ஒடுக்குவதற்கு அமெரிக்கப்படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஷியா முஸ்லிம்களின் தலைவரான ஆயதுல்லா அலி சுல்சிஸ்ரானி கண்டித்துள்ளார்.

அத்துடன் சமாதானமானதும், புத்திசாலித்தனமானதுமான முறையில் படையினர் இவற்றை அணுகவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். இதனிடையே, மனிதநேயப் பணிகளுக்கென ஈராக்கியர்கள் அடங்கிய தொடரணி ஒன்று போரினால் பாதிக்கப்பட்ட பலூஜா நகருக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

இவற்றிடையே, தென்பகுதி நகரான சமபாவில் பல குண்டுத் தாக்குதல்கள் ஜப்பானியப் படைகளுக்கெதிராக நடத்தப்பட்டுள்ளது.



தற்போது ஈராக்கில் அதிகரித்துவரும் வன்முறைகள் அமெரிக்க அரசை கவலை கொள்ள வைத்துள்ளதாக பி.பி.ஸியின் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## உலக நோக்கு

### மாவோ போராளிகளால் 2000 மக்கள் கடத்தப்பட்டனர்

நேபாள மாவோ போராளிகள் அந்த நாட்டின் தென்மேற்குக் கிராமப் பகுதிகளில் 2000 வரையான மக்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இதனையடுத்து எல்லைப்பிரதேசத்தினூடாக மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தப்பிச் சென்றுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தவகையான ஆட்கடத்தல்களை மாவோ தீவிரவாதிகள் அடிக்கடி மேற்கொண்டு வருகின்றனர். கடத்தப்பட்ட மக்களுக்கு அரசியல், கலாசார போதனைகள் வழங்கப்பட்ட பின்னர் திரும்பவும் இருபபிடங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த வகையான போதனைகளில் மாவோ போராளிகளின் எழுச்சியினால் ஏற்படக் கூடிய நன்மைகளை மக்களுக்கு அவர்கள் தெளிவுபடுத்தி வருகிறார்கள். இந்தப் போதனைகளின் பின் அதிக அளவிலான மக்கள் தாமாகவே பணிகளை மேற்கொள்வதற்கு முன்வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமது தாக்குதல்களுக்கு மக்களை மனிதக் கேடயங்களாக உபயோகப் படுத்துவற்கே மாவோ போராளிகள் மக்களை கடத்திச்செல்வதாக பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

### இந்தியாவின் கிழக்குப் பகுதியில்

# பொலிஸார் மீது கண்ணிவெடித் தாக்குதல் 26 பேர் ஸ்தலத்தில் பலி; பலர் படுகாயம்!

(ஜார்கண்ட்)

இந்தியாவின் கிழக்குப் பகுதியான ஜார்கண்ட் மாநிலத்தில் கிராமப் பகுதியில் நடத்தப்பட்ட நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் 26 பொலிஸார் கொல்லப்பட்டதுடன், பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட பல பொலிஸார் காயமடைந்தனர்.

பொலிஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்தவேளையில், இந்தக் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கியுள்ளனர். கொம்யூனிஸ அரசொன்றை நிறுவுவதற்காக போரிட்டுவரும் மக்கள் போர் அமைப்பு எனப்படும் குழுவினால் இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தேசிய ரீதியிலான தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்கென உதவிப் பிரதமர் எல்.கே.அத்வானி இந்தப் பிரதேசத்திற்கு செல்வதற்கு திட்டமிட்டிருந்தவேளை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அடர்ந்த காட்டுப் பிரதேசத்தில் இடதுசாரிப் போராளிகளை தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளையில், தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மக்கள் போரமைப்பு எனப்படும் போராளிக் குழுவினர் இந்தியாவில் கிராமப் பகுதி விவசாயிகளினால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

இந்த அமைப்பு பீஹார் மாநிலத்தில் உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கும் பாதுகாப்பு படைகளுக்கும் எதிராக தாக்குதல்களை மேற்கொண்டுவருகிறது.

இந்தியாவின் விவசாயக் கிராமப் பகுதியில் கொம்யூனிஸ்ட் ஆட்சியை நிறுவுவதற்காக கடந்த 20 ஆண்டுகளாக இந்த அமைப்பு போராடி வருகின்றது. இதுவரை 6000 பொது மக்கள் வன்செயல்களினால், இந்தப் பகுதியில் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### மனிதப்படுகொலைகள் தொடர்பாக

# ருவாண்டாவின் குற்றச்சாட்டை பிரான்ஸ் அரசு நிராகரித்தது

ருவாண்டாவில் மனிதப் படுகொலைகள் நடைபெற்ற பத்தாவது ஆண்டின் ஞாபகார்த்த நிகழ்வுகள் நடைபெற்றுவருகின்றன. ருவாண்டாவின் ஜனாதிபதி போல் ககாமி - தலைநகர் கிகாலியில் நடைபெற்ற நிகழ்வுகளில் இந்தப் படுகொலைகளை பிரான்ஸினால் பயிற்சி வழங்கப்பட்ட குட்டு குழுவினரால் நடாத்தப் பட்டது எனக் குற்றஞ்சாட்டியிருந்தார். இதனை முற்றாக மறுத்த பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சர் ரெனோட் முசெலியர், ருவாண்டாவிற்கு மேற்கொள்ளவிருந்த தனது பயணத்தையும் நிறுத்தியுள்ளதாக தெரிவித்தார்.

பிரான்ஸின் பத்திரிகையான லீ மொன்டில் பிரசுரிக்கப்பட்ட செய்தி ஒன்றை ஆதாரமாகத் தெரிவித்து இந்த மனிதப்படுகொலைகளுக்கு பிரான்ஸ் உதவி புரிந்துள்ளதாக ருவாண்டா ஜனாதிபதி தெரிவித்தார். நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த வைபவத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த வைபவத்தில் கலந்துகொண்டவர்களில் மனிதப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட வேளையில் உயிர் தப்பிக்கொண்டவர்களும் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் உணர்ச்சிவசப்பட்டு காணப்பட்டார்கள். மேலும் இந்த வகையான ஞாபகார்த்த நிகழ்வுகள் ஐக்கிய நாடுகள் சபையிலும் பிரான்ஸிலும் நடத்தப்பட்டன.




# பாலியல் நோய்களை கட்டுப்படுத்த அதிக கவனம் செலுத்த வேண்டும்

## சீன சுகாதார அமைச்சர் கோரிக்கை




(பீக்கிங்)

பாலியல் நோயான எயிட்ஸை தடுப்பதற்கான முயற்சிகள் அதிகரிக்கப்படவேண்டுமென சீனாவின் சுகாதார அமைச்சர் வூஜி சீன அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

சீனாவில் இந்த வகையான பாலியல் நோய்களினால் 800,000 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

2010 ஆம் ஆண்டளவில் சீனாவில் இந்த நோயினால் பாதிக்கப் பட்டவர்களின் எண்ணிக்கை 10 மில்லியன்களாக அதிகரிக்கப்படலாமென தெரிவிக்கப்பட்டது.

இந்த நோயினை மறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்பவர்மீது கடுமையான தண்டனை வழங்கப்படுமென சுகாதார அமைச்சர் குறிப்பிட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, அங்காலியில் எயிட்ஸ் நோய்க்கான ஆய்வு நிலையமொன்றும் அமைக்கப்படவுள்ளது.

அத்துடன், கல்வி அறிவினை அதிகரித்தல், சட்டவிரோதமாக இரத்தத்தை விற்பனை செய்தல், பாலியல் நோய் தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்குதல் ஆகியவற்றிற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என சுகாதார அமைச்சர் அதிகாரிகளை கேட்டுள்ளார்.

# அல்ஜீரிய நாட்டில் ஜனாதிபதி தேர்தல்



அல்ஜீரியாவில் ஜனாதிபதி தேர்தலில் 6 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்களில் அப்டெலாசிஷ் பவுற்றபிலிக்கா பெரும்பான்மை வாக்குகளை பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றார்.



மேலும் முன்னாள் பிரதமர் அலி பெண்பிளிஷ் அடுத்த நிலையில் காணப்படுகின்றார். தேர்தலில் ஊழல்கள் நடைபெறலாமென பவுற்றபிலிக்காவின் எதிர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, அதிக செல்வாக்குள்ள பவுற்றபிலிக்கா தன்னாட்சியில் அதிக நாட்டம் கொண்டவரெனவும் ஜனநாயகத்தில் நம்பிக்கையற்றவர் எனவும் எதிராகப் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.



# சர்வதேச உதவியை அதிகரிக்க பிரிட்டன் அரசு தீர்மானம்

பிரிட்டனின் அமைச்சர் கோடொன் பிறவுன்- பாரிஸில் நடைபெறும் உச்சிமாநாடொன்றில் சர்வதேச நிதியுதவியை 50 பில்லியன் பவுண்களிலிருந்து 100 பில்லியன் பவுண்களாக உயர்த்துவதற்கான தீர்மானத்தை தெரிவிக்கவுள்ளார்.

56 நாடுகளின் அமைச்சர்கள் இந்த உலக அபிவிருத்தி உச்சிமாநாட்டில் பங்குகொள்ளவுள்ளனர். தனது திட்டத்திற்கு ஒத்துழைக்குமாறு அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் மீது வற்புறுத்தலையும் இவர் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் வியாழன் நடைபெறவுள்ள அபிவிருத்திக்கான நிதியுதவி என்ற விவாதத்தில் அமெரிக்கா, ஜேர்மன் ஆகிய நாடுகளின் ஆதரவைப் பெறவுள்ளார்.

இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள சர்வதேச நாணயநிதியத்தின் கூட்டத்தில் அமெரிக்கா, ஜேர்மன் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. இந்த மாநாட்டில் உலக நாடுகளிடையே வறுமையை எதிர்த்துப் போரிடவும், கல்வியறிவினை அதிகரிக்கவும், நோய்களைத் தடுப்பதற்குத் தேவையான உதவிகளைப்பெறுவதற்கும் திட்டமிட்டுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கிழக்கு பல்கலைக்கழக பரீட்சைகள் 20 ஆம் திகதி

கிழக்கு பல்கலைக்கழகத்தின் பரீட்சைகள் எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் பரீட்சைகள் எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து இடம்பெறவிருந்தன எனினும் இந்தப் பரீட்சைகள் 20 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

விடுதியில் தங்கியிருந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக ஊழியர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி தமது விடுதிகளுக்கு திரும்புமாறும் பதிவாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்கு பல்கலைக்கழகத்தின் பரீட்சைகளினை திருகோணமலை வளாகத்தில் வைக்குமாறு அனைத்து பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் வவுனியா வளாகம் கோரியுள்ளது.

இதற்காக ஐம்பது மாணவர்கள் கையொப்பமிட்டு கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தற்போதைய கிழக்கு மாகாண சூழ்நிலை காரணமாக அனைத்து பீடங்களுக்குமான இரண்டாம் அரையாண்டு பரீட்சைகளுக்கு சமுகமளிக்க முடியாமல் உள்ளது. இதனால், எமக்கான பரீட்சைகளையும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் வைப்பதற்கு ஆவன செய்யுமாறு வவுனியா, முல்லைத்தீவு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜோசப், ஈழவேந்தனுக்கு தேசியப்பட்டியலில் இடம்!

இலங்கை தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மா.க.ஈழவேந்தனும், ஜோசப் பரராஜசிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழரசுக்கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா நமது ஈழநாட்டுக்கு நேற்றிரவு தெரிவித்தார்.

தேசியப்பட்டியலில் தெரிவுசெய்யப்பட்ட மா.க.ஈழவேந்தன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரின் பெயர்கள் அடங்கிய கடிதம் நேற்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ரத்னசிறி, அனுருத்தவுக்காக தேசியப்பட்டியல் எம்பிகள் விலகுவர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் தேசியப்பட்டியல் மூலம் நியமிக்கப்படும் பதின்மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர் விபரங்களை அந்தக் கட்சியின் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிடம் கையளித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் தேசியப்பட்டியலில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட மூன்றுபேர் எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுக்கு முன்னர், தமது பதவிகளை இராஜினாமாச் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கட்சியின் தேசியப்பட்டியலில் இடம்பெறாத முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவும், முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுரத்த ரத்வத்தவும் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்வதற்கு வசதியாகவே மூவர் தமது தேசியப்பட்டியலில் உறுப்புரிமையில் இருந்து விலகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பதின்மூன்று தேசியப்பட்டியல் உறுப்பினர்களில் யார் விலகவுள்ளார்கள் என்பது தெரியவரவில்லை.

# ஊர்வலம், ஆர்ப்பாட்டங்களுக்கு 13 ஆம் திகதிவரை தடை உத்தரவு!

(கொழும்பு)

இந்த மாதம் 13 ஆம் திகதி வரை ஊர்வலங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு நாடு முழுவதும் தடை விதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டும் நோக்கில் குறித்த இக்காலப் பகுதியில் இந்தத் தடையுத்தரவு அவசியம் என்று பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அடுத்த சில நாட்களுக்குள் அமைச்சரவை அங்கத்தவர்கள் நியமிக்கப்படவிருக்கும் நிலையில், கூட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்ள சில குழுவினர் திட்டமிட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்ததை அடுத்தே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரதமரின் செயலாளராக லலித் வீரதுங்க நியமனம்!

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளராக லலித் வீரதுங்கவை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்துள்ளார்.

நிர்வாக சேவையில் 25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவமுள்ள லலித் வீரதுங்க, முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் முகாமைத்துவம், நிர்வாகத் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கு

### ஐ.தே.க. கோரிக்கை

எதிர்க்கட்சி வரிசையிலுள்ளவர்களுக்கு பல்வேறு நாடாளுமன்றப் பதவிகளையும் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஐ.தே.க ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்திவருகிறது.

இது தொடர்பாக ஐ.தே.க வட்டாரங்கள் தகவல் தருகையில்-

நாடாளுமன்ற சபாநாயகராக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பது தொடர்பாக அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்பட்டதாக கூறப்படுகிறது.

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எஸ்.பி.திஸநாயக்கவுக்கு அழைப்பு

நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவை எதிர்வரும் 7 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி காலி ஹபராதுவ மத்திய கொடயில் நடைபெற்ற அறுவடை விழாவின்போது, தெரிவித்த கருத்தே உயர் நீதிமன்றத்தை அவமதிப்பதாக சட்டமா அதிபர் குற்றம் சாட்டியிருந்தார்.

காலிப்பிரதேசத்தைச் சேர்ந்த மூவர் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் பாிசலித்தபின் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஹெல உறுமயவின் தேசியப் பட்டியலில்...

குரல் எழுப்புவதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடமையாகும்.

இதற்காக தேசியப் பட்டியல் அங்கத்துவத்திற்கான அழைப்பு விடுக்கலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்து நாம் கலந்துரையாடிவருகின்றோம் எனக் குறிப்பிட்டார் அத்துரலியே ரத்ன தேரர்.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய சார்பில் நாடாளுமன்றத்தில் பௌத்த பிக்குகள் தவிர எந்த சாதாரண பிரஜையும் நியமிக்கப்படமாட்டார் என அந்தக் கட்சி உறுதிமொழி வழங்கியிருந்தது.

இதனை ஜாதிக ஹெல உறுமயவின் அதியுயர்பீட உறுப்பினர்கள் உட்பட அனைத்து அங்கத்தவர்களும் ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜாதிக ஹெல உறுமய அதியுயர் சங்கம் தமிழர் ஒருவர் பிரதமராக நியமிக்கப்படுவதற்கு ஊடகங்கள் ஊடாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் ஒருவரின்...

பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாக வாழைச்சேனைப் பிரிவுக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ அத்தியட்சகர் சாம் ஜெயத்திலக்க தெரிவித்தார்.

நேற்றிரவு 8.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிசாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இறந்தவர் 28 வயது மதிக்கத்தக்கவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பு கிரான் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் வைத்தியசாலையிலிருந்து அறிவித்தலின்றி வெளியேறியுள்ளார்.

செவ்வாய்க்கிழமை இரவு 11.35 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இவர், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்ததாக மட்டக்களப்பு வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் என். தேவராஜன் தெரிவித்தார்.

## ரணில் - ஹக்கீம் நேற்று...

கள் தெரிவு தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக ரவூப் ஹக்கீமின் ஊடக இணைப்பாளர் ஹரீஸ் தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் நடைபெற்று முடிந்ததன் பின்னர் இரு தலைவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டாவது சந்திப்பு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுக்காலை ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## பொடா வழக்கிலிருந்து...

இதுகுறித்து உடனடியாக நீதிமன்றத்தில் உள்ள அதிகாரியுடன் தொடர்புகொண்டு, இந்த உத்தரவைத் தெரிவித்து, நீதிமன்றத்திலுள்ள இந்த வழக்கிலிருந்து இவர்களை உடனடியாக விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்று இந்த ஆய்வுக்குழு தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையிலேயே பொடா மறு ஆய்வுக்குழு இந்தத் தீர்ப்பை வழங்கியது.

வெறும் வாய்மொழி ஆதரவு மட்டும் இந்த வழக்கில் குற்றமாகாது. ஒருவர் தீவிரவாதச் செயலிலோ அல்லது வன்முறைகளிலோ ஈடுபட்டதாக இருந்தால் மட்டுமே பொடா வழக்கு அவர்கள் மீது தொடுக்க முடியும் என ஏற்கனவே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது குறிப்பிடத்தக்கது.

## நாட்டைப்...

இதேவேளை - ஹெல உறுமய தனது தேசியப்பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளது.

வண. எல்லாவெல மெத்தானந்த தேரோ மற்றும் வண.ஒமல்பே சோபித தேரோ ஆகிய இருவரினதும் பெயர்களே தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## 32 அமைச்சர்கள்..

பேரியல் அஷ்ரப் வர்த்தக தொழில் துறை அமைச்சராகவும் நியமிக்கப்படலாம் என செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை இந்த அமைச்சுக்கான பதவியேற்பு இன்று இடம்பெறவிருந்தபோதும் இன்று பெரிய வெளி என்பதால் அது நாளைக்கு ஒத்திவைக்கப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சி டபிளயூ. ஜே. எம். லொக்கு பண்டாரவை சிபார்சு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## அமெரிக்கக்..

உறுப்பினர் ஹரீன் மக்ராத் சர்வதேச ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் கிறேஸ் எப் நபோலி ரானோ ஆகியோர் அடங்குகின்றனர்.

அடுத்தவாரம் மிகக்குறுகிய கால விஜயமாக கொழும்பு வரும் இவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மத்திய...

கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தநிலையில் மீண்டும் மத்திய மாகாணசபைக்கான தேர்தல் நடைபெறுமானால் அதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே வெற்றி பெறும் என கருதப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணசபை தவிர்ந்த ஏனைய மாகாணசபைகள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியின் கீழ் இயங்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (1)

# சபாநாயகர் தெரிவின்போது அரசின் பலத்தை அறியலாம்

### முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறுகிறார்

புதிய நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறும்போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பலத்தை அறிந்துகொள்ள முடியும் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார்.

இந்தமுறை ஐக்கிய சுதந்திர முன்னணி பெற்ற வாக்குகளில் 14 லட்சம் வாக்குகளை ஜே.வி.பியே பெற்றுள்ளது. பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு 28 லட்சம் வாக்குகள் கிடைத்தன.

இதனடிப்படையில் நாட்டில் அதிக வாக்குகளை பெற்ற தனிஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சியே காணப்படுகிறது.

பழைய தேர்தல் முறையிருந்திருந்தால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தமக்குக் கிடைத்திருக்கும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறுகின்றது.

அவ்வாறான மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைக் கொண்டிருந்த அரசாங்கத்தைத்தான் இவர்கள் கலைத்தனர்.

இவர்கள் கூறும் பாரிய வெற்றியை எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டி புதிய சபாநாயகர் தெரிவுசெய்யும்போது எம்மால் அறிந்துகொள்ளமுடியும் எனவும் ராஜித சேனாரட்ண மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்துக்கு...

என்று இராணுவத் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதிகமான சம்பளம் வழங்குவதாக உறுதியளித்து கடந்த செப்ரெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ ஆட்சேர்ப்புக்கு அதிக வரவேற்புக் கிடைக்கவில்லையென்றும், 4000 பேரே இராணுவத்தில் இணைந்துகொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் புதிய அரசு பொறுப்பேற்ற ஒரு சில நாட்களுக்குள்ளாகவே இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய கடற்படைக்...

கொச்சி துறைமுகத்தைத் தரிப்பிடமாகக் கொண்ட 'தரங்கினி' கப்பல், கடந்த வருடம் ஜனவரி 23 ஆம் திகதி தனது கடற்பயணத்தை ஆரம்பித்திருந்தது. அடுத்த மாதம் இந்தக் கப்பல் தனது பயணத்தைப் பூர்த்திசெய்து கொச்சி திரும்புகிறது.

இந்தப் பயணம் சமுத்திரங்களுக்கு இடையில் நட்புறவை ஏற்படுத்தும் வகையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தக் கடற்பயணத்தில் தரங்கினி, 17 நாடுகளின் 37 துறைமுகங்களுக்கு விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசாங்கத்திற்கு...

லன்ஸ்ரீட் தமது நாட்டின் ஆதரவை உறுதி செய்தார்.

சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த அமெரிக்க உயர் ஸ்தானிகர் -

ஐக்கிய அமெரிக்காவும் இலங்கையும் ஜனநாயகம் மற்றும் பொருளாதார வளர்ச்சி இலக்கினை நோக்கி பயணம் செய்கின்றன.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவை வழங்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை - பிரிட்டன் உயர் ஸ்தானிகரும், சீன உயர் ஸ்தானிகரும் நேற்றுக் காலை புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.